# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு.ப. ராஜ்குமார் , MA., LLB., Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மாண்புமிகு துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**ந.க.எண் : 164 /2015 / எம்சி. 8 நாள் : 19.01.2015**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **22.01.2015 வியாழக்கிழமை காலை 11.15** மணிக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஜனவரி 2015

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | Jnnurm – 24x7 குடிநீா் திட்டம் செயலாக்கம் செய்தல்- தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் தீா்மானத்தினை பதிவு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **2** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - 2 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - காந்திபுரம் மற்றும் டாடாபாத் பகுதிகளில் தாா்பேட்ஜ் பணி மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **3** | கல்விப் பிரிவு - சொந்த கட்டிடம் இல்லாமல் தனியாா் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வரும் சிங்காநல்லூா் (தெற்கு) மாநகராட்சிப் பள்ளிக்கு 2013-2014 மற்றும் 2014-2015 நிதியாண்டிற்கு வாடகை வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.57,096/- கட்டிட உரிமையாளருக்கு வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **4** | பொறியியல் பிரிவு - மாநகராட்சியில் மேம்பாட்டு மற்றும் வளா்ச்சித்திட்ட பணிகளை ஆய்வு செய்ய வருகை தரும் உயா் அலுவலா்களை அழைத்து வருவதற்கும் ஆய்விற்கு அழைத்து செல்வதற்கும் தனியாக ஒரு இனோவா வகை வாகனம் சுமாா் ரூ.17.50 லட்சம் செலவினத்தில் D.G.S.& D விலையில் வாங்குதல் – நகராட்சி நிா்வாக ஆணையரகத்தின் அனுமதி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **5** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூா் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் பணிகளுக்கென ஒரு எண்ணிக்கை கழிவுநீா் உறிஞ்சி (Vehicle Mounted Suction Machine) இயந்திரம் ஒன்றினை ரூ 29.5 லட்சம் செலவினத்தில் இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வாங்குதல் - நகராட்சி நிா்வாக ஆணையரகத்தின் அனுமதி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **6** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வாா்டு 96-98க்குட்பட்ட சாரதா மில் ரோடு மற்றும் பொள்ளாச்சி ரோடு பகுதியில் மழைநீா் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி – மதிப்பீடு ரூ. 53.70 இலட்சம் - மாமன்ற நிா்வாக அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **7** | பொது சுகாதாரப் பிரிவு - மாநகராட்சி அனைத்து நகா்நல மையங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் காவலா்கள், ஆயாக்கள், துப்புரவு பணியாளா்களை நியமனம் செய்தல் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - புதிய ஒப்பந்ததாரா் நியமினம் செய்யப்படும்வரை காலநீட்டிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **8** | பொது சுகாதாரம் - மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் ஒப்பந்தம் அடிப்படையில் ஓட்டுநா்கள்- துலக்குநா்கள் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் - புதிய ஒப்பந்தாரா் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **9** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வாா்டு எண் 64 – சிங்காநல்லூா் பேருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை தி.ள். சாந்தி சோஷியல் சா்வீஸஸ், கோயம்புத்தூா் என்ற தனியாா் தொண்டா்வு அறக்கட்டளை நிறுவனத்திற்கு பராமரிப்புப் பணி மேற்கொள்ள ஒப்படைப்பு செய்தல் மற்றும் குத்தகை இனத்தை வரியில்லா இனங்களின் கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - பிரதான அலுவலகத்தில் அலவலக பணிகள் மேம்பாட்டிற்காக தனியாா் மூலம் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சா் நியமனம் செய்தல் மற்றும் ஒரு உதவி திட்ட அமைப்பாளா் நியமனம் செய்வதற்கு (ஒரு வருட காலத்திற்கு) ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது – ஒப்பந்ததாரரை புதியதாக நியமனம் செய்யும்வரை ஒப்பந்ததாரரை ஏற்கெனவே உள்ள ஒப்பந்த விலையில் பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்தை ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **11** | வருவாய் பிரிவு - தொழில்வரி – உயா்ந்தபட்ச அரையாண்டு தொழில்வரி நிா்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |

| | |
|---|---|
| **12** | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட நான்கு மண்டலங்களில் 40 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை அரசு மற்றும் தனியார் கூட்டு ஒப்பந்த PPP(Puplic Private Partnership) முறையில் பராமரிப்பு செய்தல் மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் புதியதாக தெருவிளக்குகள் பொருத்தி பராமரிக்கும் பணி மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோரியது ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டது - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **13** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 69- இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்குதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **14** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 69- புலியகுளம் ரோடு மாநகராட்சி சமுதாயக்கூடத்திற்கு (மெர்சி ஹோம்) உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்குதல்- உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **15** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 67- திருச்சி ரோடு இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்குதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **16** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 67- மாநகராட்சி மருதூர் திருமண மண்டபத்தை 06.01.2014-ம் தேதிய ஏல நடவடிக்கையின்படி ஸ்ரீ கணபதி சுயஉதவிக்குழு, இராமநாதபுரம் என்ற குழுவிற்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **17** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 64, சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மீன் வளர்ச்சிக்கழகம் விற்பனைக்கூடத்தின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்குதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **18** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 64, சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள விஜயா பதிப்பகம் புத்தக நிலையத்திற்கு உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்குதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **19** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 63- திருச்சி ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்குதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **20** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - 2014-17-ம் மூன்றாண்டுகளுக்கு வருடாந்திர குத்தகை இனங்கள் ஒப்படைக்கப்பட்டது – 31.03.2015 உடன் ஓராண்டிற்கு உரிமக்காலம் முடிவடைவதால் குத்தகை இனங்களை 2015-16–ம் இரண்டாம் ஆண்டிற்கு ஒப்படைப்பதற்கும் 2012-15 மூன்றாண்டு உரிமக்காலம் முடிவடைந்த குத்தகை இனங்களை 2015-18–ம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பதற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **21** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சௌரிபாளையம் மற்றும் உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனைளை குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **22** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 69- பங்கஜா மில் ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்குதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **23** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 57-மசக்காளிபாளையம் சாலையில் உள்ள மாநகராட்சி கடையை தமிழக அரசின் சிறப்புத் திட்டம் - அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் அமைப்பதற்கு கோவை மண்டல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **24** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - 4 குத்தகை இனங்கள் - கட்டணம் வசூலிக்கும் உரிமம் - பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **25** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் – 2015 - 2018 மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2015 – 2016-ம் ஈண்டிற்கு 5 % சதவீதம் உயர்வு செய்து புதுப்பித்தல் – பொது மின் ஏலம் மற்றும் உயர்வு செய்து புதுப்பித்தல் பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் – உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **26** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 98ல் பகுதியில் பாரத் நகரில் கிணத்துகிடவு சட்ட மன்ற உறுப்பினர் நிதியில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலை கடை எண் 116க்கு வாடகை நிர்ணயம் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **27** | வருவாய் பிரிவு-மத்திய மண்டலம் வார்டு எண்.54-ரங்கநாதபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் காலியாக உள்ள அலுவலகத்தை காவல் துறை கண்காணிப்பாளர் கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு தற்காலிகமாக மாத வாடகை ரூ.5,12,287/-க்கு ஒதுக்கீடு செய்ததை குறைந்தபட்ட மாத வாடகை ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| **28** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண். 82-ல் உக்கடம் பேருந்து நிலையம் அருகாமையிலுள்ள (பழைய மீன் மார்க்கெட் இருந்த இடத்தில்) இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஏல இனத்தில் இருந்து நீக்கம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **29** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - டாக்டர் நஞ்சப்பாசாலை - கைத்தறி மைதானத்தை காந்திபுரத்தில் பாலம் கட்டுதல் பணிக்கு நெடுஞ்சாலைத் துறைக்கு வாடகையின்றி வழங்க அனுமதி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **30** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.54 – விவேகானந்தா சாலையிலுள்ள ரங்கநாதபுரம் ஆரம்பப்பள்ளி வளாகத்தில் வடப்புறத்தில் 1720 சதுரடியினை கூடுதலாக கோவை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலக பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்திக் கொள்ள மாத வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **31** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இரத்து செய்தல் மற்றும் இத்துடன் கூடுதலாக நான்கு சக்கர வாகனங்களுக்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தையும் சேர்த்து பொது ஏலம் கோருதல் -வைப்புத்தொகைகள் நிர்ணயம் செய்வது – மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **32** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் -வார்டு எண்.73-பழைய தெற்கு மண்டல அலுவலகத்தில் தரை தளத்தில் துணை இயக்குநர் குற்ற வழக்கு தொடர்வுத் துறைக்கு ஒதுக்கீடு செய்ததை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **33** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் -2015-2018 மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2015-2016-ம் ஆண்டிற்கு 5சதவீதம் உயர்வு செய்து புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **34** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.51 சீனிவாசபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள கடை எண்.1 பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது –மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **35** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை) முதல் தளத்தில் கடை எண்.8, 9 மற்றும் 10 பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **36** | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.80-ல் ராஜவீதி கார்பார்க்கிங் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 1 (சதுரடி 96.87)பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **37** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.68 நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிகவளாகம் கடை எண்.1 (310சதுரடி ) மற்றும் கடை எண்.2-க்கு (310சதுரடி) பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **38** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் காந்திபரம் மத்திய பேருந்து நிலையம் வார்டு எண்.54. தளம் எண்.4-ல் கடை எண். I (1450சதுரடி) பெறப்பட்ட ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **39** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.23 திருவேங்கடசாமி ரோடு வணிக வளாக கட்டிடத்தில் இரண்டு (2) கடைகள் பொதுப்பணித்துறை வாடகை அடிப்படையில் – கோயம்புத்தூர் கூட்டுறவு கட்டிடச் சங்கத்திற்கு ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **40** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 2015-16-ம் ஆண்டிற்கு குத்தகைதாரர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மத கடிதம் வழங்கப்படாத இனங்களை மறுஏலம் கொண்டு வரவும், மூன்றாண்டு முடிவுற்ற இனங்களுக்கு பொதுஏலம் கோருதல் - உரிமம் நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரரின் உரிமத்தை ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **41** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண்.23, பெரியசாமி சாலை புதிய கடைகள் மற்றும் திருவேங்கடசாமி முதல் தளத்தில் கட்டியுள்ள புதிய கடைகள் - பொதுமின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **42** | வருவாய் பிரிவு - மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள நவீன பேருந்து நிலையத்தில் தரைதளத்தில் உள்ள இரண்டு கட்டணம் கழிப்பிடம் ஆண்கள், பெண்கள் கட்டண கழிப்பிடம், கட்டணம் வசூலிக்கும் உரிமம் -உயர்ந்தபட்ச ஏலத்தை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **43** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் - 23 இராமசந்திரா சாலையில் மாநகராட்சி வணிகவளாகத்துடன் கூடிய அலுவலக கட்டிடம் கட்டுதல் பணி - மதிப்பீடு - ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **44** | பொறியியல் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண் - 23 க்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் திருவேங்கடசாமி சாலையில் உள்ள மாநகராட்சி கலையரங்கம் வளாகத்தில் புதிதாக உணவுகூடத்துடன் கூடிய கூட்டரங்க கட்டிடம் கட்டுதல் பணி - மதிப்பீடு - ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **45** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 24 – காந்திபூங்காவிற்கு அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மதிப்பீடு - ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **46** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் - 24 ஆரோக்கியசாமி சாலையில் அமைந்துள்ள ஆர்.எஸ். புரம் இருபாலர் மேல்நிலைப்பள்ளியின் மைதானத்தை ஹாக்கி விளையாட்டு (சிந்தடிக்) மைதானமாக உருவாக்கும் பணிகள் செய்தல் - மதிப்பீடு - ரூ. 75.00 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **47** | பொறியியல் பிரிவு - மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து கோரிக்கைகளின் முன்னுரிமைஅடிப்படையில் மேற்கொள்ளப்படும் பணிகள் - மதிப்பீடு மொத்தம் ரூ. 1928.98 இலட்சம் - ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளுதல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி வழங்கப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **48** | பொறியியல் பிரிவு - கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் உள்ள வீரபாண்டி பிரிவு நீர் உந்து நிலையத்திற்கு 380 KVA ஜெனரேட்டர் வழங்கி பொருத்துதல் மற்றும் சிறுவாணி திட்டத்தின் கீழ் சிறுவாணி அடிவாரம் முதல் காந்திபூங்காவில் உள்ள தரைமட்ட தொட்டிவரை அமைக்கப்பட்ட பழைய பழுதடைந்த 450 மிமீ விட்டமுள்ள இரும்பு குடிநீர் குழாயை மாற்றியமைத்தல்.–கூடுதல் செலவினம் ஏற்றல் - ரூ. 35.00 லட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **49** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2014-15) -ன் கீழ் மதிப்பீடு ரூ.**1763.40** இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – மானியத்தொகை ரூ. 1200.00 இலட்சம் போக மீதித்தொகை ரூ. 563.40 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலருந்து மேற்கொள்ளுதல – மாண்புமிகு மேயா் அவா்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பினனேற்ப கோருதல் - தொடா்பாக |
| **50** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - டாக்டா் நஞ்சப்பா சாலை பாரதியாா் சாலை சந்திப்பில் உயா்மட்ட பாலம் மற்றும் சுரங்க நடைபாதை அமைத்தல் பணி - இடையூறாக உள்ள பில்லூா் குடிநீா் குழாயினை மாற்றியமைத்தல் - மதிப்பீடு ரூ. 74.80 இலட்சம் - நெடுஞ்சாலைத்துறையிலிருந்து நிதி பெற்று பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **51** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - டாக்டா் நஞ்சப்பா சாலை பாரதியாா் சாலை சந்திப்பில் உயா்மட்ட பாலம் மற்றும் சுரங்க நடைபாதை அமைத்தல் பணி - இடையூறாக உள்ள சிறுவாணி குடிநீா் குழாயினை மாற்றியமைத்தல் - மதிப்பீடு ரூ. 74.60 இலட்சம் - நெடுஞ்சாலைத்துறையிலிருந்து நிதி பெற்று பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **52** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் வாா்டு எண் 19- அஜ்ஜனூா் முதல் ஸ்ரீராம் காா்டன் வரை தாா்தளம் அமைத்தல் பணி - ரூ. 75,00,000- இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **53** | பொறியியல் பிரிவு - 34 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |

**நன்றியுரை**

அ)

**<u>திருக்குறள்</u>**

இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

**(குறள் - 951)**

**<u>விளக்கம்</u>**

பாரம்பரியம் மிக்க சமுதாயச் சூழ்நிலையில் வளர்ந்தவர்களிடம் நடுநிலைமையான பண்பும், தீமைக்கு அஞ்சி வெட்கும் நுண்ணுணர்வும் இயற்கையாகவே அமையும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள பில்லூர் இரண்டாவது தனிக் குடிநீர் திட்டத்தின் மூலம் மாநகராட்சியால் பெறப்படவுள்ள **125** எம்.எல்.டி. குடிநீர் மற்றும் சிறுவாணி குடிநீர் திட்டம் மூலம் பெறப்படும் **75** எம்.எல்.டி குடிநீர் மொத்தம் **200** எம்.எல்.டி. குடிநீரினை பயன்படுத்தி, எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக அமைப்பினை அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகளை செய்து (Improving & revamping the existing proposed water supply scheme with continuous 24 x 7 pressured water supply) **24** மணி நேரமும் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ. **451.66** கோடி மதிப்பில் **"24 x 7 குடிநீர் திட்டத்தினை"** கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்த மாநில அரசின் நிர்வாக அனுமதி பெற உரிய முன்மொழிவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசிற்கு அனுப்ப மாமன்றம் தனது தீர்மானம் எண் **267**, நாள் **14.11.2013**–ல் ஒப்புதல் வழங்கியது.

| | | |
|---|---|---|
| மத்திய அரசின் மானிய நிதி (50%) | – | ரூ. 225.83 கோடி |
| மாநில அரசின் பங்கு தொகை (20%) | – | ரூ. 90.33 கோடி |
| மாநகராட்சியின் பங்கு நிதி (30%) | – | ரூ. 135.50 கோடி |
| மொத்தம் | – | ரூ. 451.66 கோடி |

இந்நிலையில், கடந்த **29.11.2013** அன்று அரசு முதன்மைச் செயலாளர் நிதித்துறை / தலைமை செயல் அலுவலர் (CEO), தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TamilNadu Infrastructure Development Board)அவர்கள் தலைமையில் அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு செயலாளர் நிதித்துறை (செலவினம்), நகராட்சி நிர்வாக ஆணையர், நிதித்துறை இணைச் செயலாளர், நகராட்சி நிர்வாக இணை ஆணையர் ஆகிய அலுவலர்கள் கலந்துகொண்ட **தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் உயர்மட்ட குழு** கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் திட்ட செயலாக்கத்திற்கான நிதி ஆதாரங்களின் சாத்தியக்கூறுகளை (Financial Feasibility Report) ஆராய்ந்து அறிக்கை அளிக்க நிதி ஆலோசக நிறுவனத்தினை (Transaction Advisor) குழு கேட்டுக்கொண்டது. மேலும் இத்திட்டத்திற்கான ஒப்புதலை **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** தலைமையில் நடைபெறவுள்ள திட்ட ஒப்புதல் குழுவின் ஒப்புதல் பெற உரிய முன்மொழிவுகளை தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் மூலமாக சமர்ப்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது. இதனடிப்படையில் மேற்படி நிறுவனத்தால் அளிக்கப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கையில் இதுவரை திட்ட செயலாக்க காலங்களில் கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழிலாளர்கள் ஊதியங்களில் ஏற்படும் விலை ஏற்றங்களினால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை மாநகராட்சி தனது வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டு வந்துள்ளது. இதனால் மாநகராட்சிக்கு கூடுதல் நிதிச் சுமை ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. இவ்வகை கூடுதல் நிதிச்சுமையினை தவிர்க்கும் பொருட்டு உத்தேச திட்ட செயலாக்க காலங்களான **2014– 15**, **2015–16**, **2016–17** மற்றும் **2017–18** ஆகிய நிதி ஆண்டுகளில் ஏற்படும் விலை ஏற்றங்களின் அடிப்படையில் மாநகராட்சி பங்குத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதின் மூலம் ஏற்படும் அதிகப்படியாகும் கூடுதல் செலவினம் ஆகிய மொத்த கூடுதல் செலவினத் தொகையினை முழுமானியமாக மாநில அரசு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மூலமாக பெற்று மாநகராட்சியின் பங்கு மற்றும் இத்திட்டத்திற்கு எதிர்கொள்ளும் கூடுதல் செலவினை ஈடுசெய்துகொள்வதற்காக தீர்மான எண் **352**, நாள் **30.01.2014** –ல் மாமன்றம் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.

இந்நிலையில் **23.09.2014**–ந் தேதிய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக கூட்ட நடவடிக்கையில் மேற்கண்ட திட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மத்திய அரசு பங்களிப்பு (JNNURM) | – | ரூ. 225.83 கோடி | (40.60 %) |
| மாநில அரசு பங்களிப்பு (JNNURM) | – | ரூ. 90.33 கோடி | (16.20 %) |
| தனியார் பங்களிப்பு (Concessionaire) மூலம் நிதி | – | ரூ. 111.31 கோடி | (20.00 %) |
| மாநகராட்சி பங்களிப்பு | – | ரூ. 55.66 கோடி | (10.00 %) |
| ஒதுக்கப்படாதது (Unallocated) (TNIDB) | – | ரூ. 73.47 கோடி | ( 13.20 %) |
| மொத்தம் | | ரூ. 556.57 கோடி | (100.00 %) |

23.09.2014–ந் தேதிய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் 2வது கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 24 x 7 குடிநீர் திட்டத்தினை தனியார் பங்களிப்பு (Public Private Partnership) மூலம் செயல்படுத்திட தீர்மானிக்கப்பட்டது.

மேலும் 23.09.2014–ந் தேதிய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக கூட்ட நடவடிக்கை குறித்த தீர்மானத்தின் நகல் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அ) தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக சட்டம் 2012 பிரிவு 14(4) –ன் கீழ் கழகத்தால் பரிந்துரைக்கப்பட்டதற்கு இணங்க தனியார் பங்களிப்பு (Public Private Partnership) மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பழைய 60 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் (2011–ன் எல்லை விரிவாக்கத்திற்கு முன்) 24 x 7 குடிநீர் திட்டத்தினை செயலாக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) 23.09.2014–ந் தேதிய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக கூட்ட நடவடிக்கை குறித்த தீர்மானத்தின் நகலினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண். 2896 / 08 / ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 371 நாள் 22.01.2015**

அலுவலகக் குறிப்பு அ. அனுமதிக்கப்பட்டது. ஆ. பதிவு செய்யப்பட்டது

---

**பொருள் எண் 2**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 17.12.2014 அன்று பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6527/ 2014/ எம்டி5 | மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட டாடாபாத் பகுதிகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக புதைவடம் பதிக்க வெட்டப்பட்ட சாலைகளுக்கு தார்பேட்ச் போடுதல் | 33.35 | 17.11.2014 முதலாம் அழைப்பு | 1). திரு.ஆர். மயில்வாணன் 5.95% அதிகம்<br>2).திரு.ஏ.ராஜு 4.50% அதிகம் | திரு. திரு.ஏ.ராஜு 4.41 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 6526/ 2014/ எம்டி5 | மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட காந்திபுரம் பகுதிகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக புதைவடம் பதிக்க வெட்டப்பட்ட சாலைகளுக்கு தார்பேட்ச் போடுதல் | 45.65 | 17.11.2014 முதலாம் அழைப்பு | 1). திரு.ஆர். மயில்வாணன் 8.29% அதிகம்<br>2).திரு.ஏ.ராஜு 6.66% அதிகம் | திரு. திரு.ஏ.ராஜு 4.49 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேலும், மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகளுக்கு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6527/2014/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 372 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

| பொருள் - | சொந்த கட்டிடம் இல்லாமல் தனியார் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வரும் மாநகராட்சிப்பள்ளி சிங்காநல்லூர் (தெற்கு)- 2013-2014 மற்றும் 2014-2015 நிதியாண்டிற்கு வாடகை வழங்கப்பட வேண்டியது ரூ.57,096/- கீழ்கண்டபடி ஒரு பள்ளிக்கு கட்டிட உரிமையாளர்க்கு வழங்க மாமன்ற அனுமதி பெற பொருள் சமர்ப்பித்தல் - சார்பு. |
|---|---|

கோயம்புத்தூர் மாநகராட்சி சிங்காநல்லூர் (தெற்கு) ஆரம்பப்பள்ளி வாடகை கட்டிடத்திற்கு 2013-2014 மற்றும் 2014-2015-ம் நிதியாண்டிற்கு வழங்கப்பட வேண்டிய வாடகைத் தொகை ரூ.57,096/-ஐ கட்டிட உரிமையாளருக்கு வழங்கவும், அத்தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடவும், கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் தீர்மான எண்.28 நாள். 09.01.2015-ன்படி, மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | மாநகராட்சி பள்ளி முகவரி | மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய வாடகை | மொத்தம் வழங்கப்பட வேண்டிய வாடகைத் தொகை | வழங்கப்பட வேண்டிய கட்டிட உரிமையாளர் |
|---|---|---|---|---|
| 1. | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி சிங்காநல்லூர் (தெற்கு) கோயம்புத்தூர். | 2013-2014<br>ரூ.2379x12<br><br>2014-2015<br>ரூ.2379x12 | Apl-13<br>To<br>Mar-14<br>ரூ.28,548/-<br>Apl-14<br>To<br>Mar-15<br>ரூ.28,548/- | செயலாளர்,<br>அஸ்தாந்திர கொல்ல சமூக சங்கம் எண்.1<br>அஸ்தாந்திர நாயக்கர் வீதி,<br>சிங்காநல்லூர்,<br>கோயம்புத்தூர்-641 005. |
| | | மொத்தம் | ரூ.57,096/- | |

அலுவலகக் குறிப்பு :-ஒப்புதல் அளிக்கலாம். எண். 5064/2014/ கே 14

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 373 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி **105.06** சதுர கிலோ மீட்டரிலிருந்து **257.04** சதுர கிலோ மீட்டர் பரப்பளவாக விரிவாக்கம் செய்யப்பட்டு **100** வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் மேம்பாட்டு பணிகளுக்காக பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு திட்ட செயலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விதி எண் **110** மற்றும் அரசு மானியக்கோரிக்கைகளில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு **2379** கோடியில் வளர்ச்சித்திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இத்திட்டங்களை செயல்படுத்துவதற்குரிய செயலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டங்களின் நடவடிக்கைகளையும் முன்னேற்றத்தினையும் பார்வையிடவும் மற்றும் ஆய்வு செய்வதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் தமிழக அரசு செயலகத்திலிருந்து வி.ஐ.பி அந்தஸ்துள்ள உயர் அலுவலர்கள் அவ்வப்போது வருகை புரிகின்றனர். மேற்படி வருகை தரும் வி.ஐ.பி அந்தஸ்துள்ள உயர் அலுவலர்கள் வருகை தரும்போது அவர்களை அழைத்து வருவதற்கும் ஆய்விற்கு அழைத்து செல்வதற்கும் இம்மாநகராட்சியில் தனியாக சிறப்பு வாகனங்கள் எதுவும் இல்லை. மாநகராட்சியில் உள்ள அலுவலர்களின் வாகனங்களையே பயன்படுத்தும் சூழ்நிலை உள்ளது.

எனவே, இம்மாநகராட்சியில் மேம்பாட்டு மற்றும் வளர்ச்சித்திட்ட பணிகளை ஆய்வு செய்ய வருகை தரும் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் தமிழக அரசு செயலகத்திலிருந்து வி.ஐ.பி அந்தஸ்துள்ள உயர் அலுவலர்களை அழைத்து வருவதற்கும் ஆய்விற்கு அழைத்து செல்வதற்கும் தனியாக ஒரு இனோவா வகை வாகனம் சுமார் ரூ.**17.50** லட்சம் செலவினத்தில் D.G.S.& D விலையில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் அனுமதி பெற்று வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண். **29/2015/எம்.டி.2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 374 நாள் 22.01.2015</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மநகராட்சி பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் பணிகளுக்கென கழிவுநீர் உறிஞ்சி (Vehicle Mounted Suction Machine) இயந்திரங்கள் நான்கு எண்ணிக்கைகள் உள்ளன. கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது, சமீபத்தில் பெய்த கன மழையின் பொழுது இம்மாநகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்பட்ட அடைப்புகளை அகற்றும் பணிகளை இவ் இயந்திரங்களைக் கொண்டு உடனுக்குடன் செய்து முடிக்க இயலாத நிலை ஏற்பட்டதுடன் பணிகளை செய்து முடிக்க மிகுந்த காலதாமதம் ஏற்பட்டது. இனி வருங்காலங்களில் இந்நிலையினை போக்க கூடுதலாக கழிவுநீர் உறிஞ்சி மண்டலத்திற்கு ஒரு கழிவுநீர் உறிஞ்சி தேவைப்படும்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் பணிகளுக்கென ஒரு எண்ணிக்கை கழிவுநீர் உறிஞ்சி (Vehicle Mounted Suction Machine) இயந்திரம் ஒன்றினை ரூ **29.5** லட்சம் செலவினத்தில் இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதிவேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண் : **10547/2011**/எம் டி **5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 375 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண் 96 – 98 க்குட்பட்ட சாரதாமில் ரோடு மற்றும் பொள்ளாச்சி ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.53.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.5903/2014/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 376 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி அனைத்து நகர்நல மையங்களிலும் ஒப்பந்தம் அடிப்படையில் காவலர்கள், ஆயாக்கள் துப்புரவு பணியாளர்கள் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் -புதிய ஒப்பந்தாரர் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு செய்தல் அனுமதி - வேண்டுதல் - தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சியின்கீழ் இயங்கும் 20 நகர்நல மையங்களிலும் காவலர்கள், ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்தம் அடிப்படையில் M/s. Sanitz Technology, கோவை நிறுவனத்தார் மூலம் 01.03.2014 முதல் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்காலம் 28.02.2015 உடன் முடிவடைகிறது. எனவே இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 9982/2013/எம்இ4(எம்இ2)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 377 நாள் 22.01.2015**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் ஒப்பந்தம் அடிப்படையில் ஓட்டுநர்கள் - துலக்குநர்கள் - புதிய ஒப்பந்தப்புள்ளி கோருதல் -புதிய ஒப்பந்தாரர் நியமனம் செய்யும் வரை காலநீட்டிப்பு செய்தல் அனுமதி - வேண்டுதல் - தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் இயக்கப்படும் வாகனங்களான Mini Tipper, Refuse Collector, Mini Auto Tractor, JCB , Jeep , Open body மற்றும் Water lorry இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றை இயக்க ஒப்பந்ததாரர் தி.ள். விஷ்ணு இன்ப்ராஸ்டக்சர்ஸ், கோவை நிறுவனத்தார் மூலம் ஓட்டுநர்கள் மற்றும் துலக்குநர்கள் கடந்த 01.03.2014-ம் மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டு வாகனங்கள் இயக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்காலம் 31.01.2015 உடன் முடிவடைகிறது. எனவே இப்பணிக்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யலாம். மேலும் இதற்கு காலதாமதம் ஆகும் என்கிற காரணத்தால் புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை ஏற்கெனவே மேற்படி பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரையே ஏற்கெனவே வழங்கப்பட்டுவரும் தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி காலநீட்டிப்பு செய்யவும் மேலும் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமனம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | மண்டலம் | தேவையான ஓட்டுநர்கள் மற்றும் துலக்குநர்கள் | உத்தேச செலவினம் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு | 31 ஓட்டுநர்கள் | 52,60,000.00 | 12 மாதங்கள் |
| 2 | மேற்கு | 29 ஓட்டுநர்கள் | 49,50,000.00 | 12 மாதங்கள் |
| 3 | வடக்கு | 24 ஓட்டுநர்கள் | 40,75,000.00 | 12 மாதங்கள் |
| 4 | தெற்கு | 21 ஓட்டுநர்கள் | 35,75,000.0 | 12 மாதங்கள் |
| 5 | மத்தியம் | 42 ஓட்டுநர்கள் | 71,25,000.00 | 12 மாதங்கள் |
| 6 | பிரதான அலுவலகம் | இலகுரக வாகனம் 27 ஓட்டுநர்கள் | 45,80,000.00 | 12 மாதங்கள் |
| | பிரதான அலுவலகம் | கனரக வாகனம் 8 ஓட்டுநர்கள் | 14,55,000.00 | 12 மாதங்கள் |
| 7 | மேற்கு மற்றும் மத்தியம் | துலக்குநர்கள் 53 நபர்கள் | 66,10,000.00 | 12 மாதங்கள் |
| 8 | கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு | 34 துலக்குநர்கள் | 42,40,000.0 | 12 மாதங்கள் |

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 5344/2013/எம்இ4(எம்இ5)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 378 நாள் 22.01.2015**

---

**பொருள் எண் 9**

| | |
|---|---|
| பொருள் | குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 64 – சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை தி.ள். சாந்தி சோஷியல் சர்வீஸஸ், கோயம்புத்தூர் என்ற தனியார் தொண்டார்வு அறக்கட்டளை நிறுவனத்திற்கு பராமரிப்புப் பணி மேற்கொள்ள ஒப்படைப்பு செய்யவும் வரியில்லா இனங்களின் கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| பார்வை | ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 05.12.2014 |

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 64 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்தை பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகைதாரருக்கு ஒப்படைக்கப்பட்டதில், குத்தனை உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைகிறது. இந்நிலையில் குத்தகைதாரர் ஏலநிபந்தனைகளை மீறி கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக பல்வேறு புகார்கள் பெறப்பட்டு வருவதால், பொதுமக்களிடையே மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் நிலை ஏற்படுகிறது. எனவே மேற்படி கட்டணக் கழிப்பிடத்தை தி.ள். சாந்தி சோஷியல் சர்வீஸ் என்ற அறக்கட்டளைக்கு "Free of Cost" என்ற அடிப்படையில் ஒப்படைத்து பராமரிப்பு செய்ய பார்வையில் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தையும், பேருந்து நிலையத்திற்குள் உள்ள இலவச கழிப்பிடத்தையும் சிறந்த முறையில் ''Free of Cost'' என்ற அடிப்படையில் பராமரிப்பு செய்துவரும் தி.ள். சாந்தி சோஷியல் சா்வீஸ் என்ற அறக்கட்டளைக்கு சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்தை ''Free of Cost'' என்ற அடிப்படையில் பராமரிப்பு செய்வதற்கு ஒப்படைக்கவும் மேற்படி குத்தகை இனத்தை வரியில்லா இனங்களின் கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்யவும் மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 12852/2014/ அ11 (கி)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 379 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் அலவலக பணிகள் மேம்பாட்டிற்காக தனியார் மூலம் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் நியமனம் செய்தல் மற்றும் ஒரு உதவி திட்ட அமைப்பாளர் நியமனம் செய்வதற்கு (ஒரு வருட காலத்திற்கு) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது மாமன்றத்தீா்மான எண்.**364** நாள். **30.01.2014** ன்படி தி/ள்.கே.சி.பி.இன்ஜின்யர்ஸ் பி லிட், ஒப்பந்ததாரருக்கு மேற்படி பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணிக்கான ஒப்பந்த காலம் நவம்பர் **2014** மாதத்துடன் முடிவடைந்தது.

தற்போது இப்பணிக்கு புதிதாக மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளதால் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி புதிதாக ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை இப்பணியின் அவசியம் கருதி இப்பணியினை செய்துவரும் தி/ள்கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி லிட், ஒப்பந்ததாரரை ஏற்கெனவே உள்ள ஒப்பந்த விலையில் பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்தை ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –அனுமதிக்கலாம் ந.க.எண்.**8547/2013**/எம்சி.**2**

**மாநகர மன்ற தீா்மானம் எண் 380 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய் பிரிவு - தொழில் வரி - உயா்ந்தபட்ச அரையாண்டு தொழில் வரி நிா்ணயம் செய்வது – மாமன்றத்தின் ஒப்புதல் பெறுவது - தொடா்பாக.

**பாா்வை :**
1. அரசு ஆணை (நிலை) எண் 11 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை நாள் 12.09.1999.
2. மாமன்ற தீா்மானம் எண் . 203 நாள் : 19.09.2013.
3. நகராட்சி நிா்வாக ஆணையாளா் அவா்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16723/2014/R4 நாள். 20.08.2014
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக்கூட்டத் தீா்மானம் எண்.112 நாள். 20.01.2015

******

பாா்வை (1) மற்றும் (2)ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, அரசாணை மற்றும் மாநகர மன்ற தீா்மானத்தின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் பணிபுரிந்து அல்லது தொழில் நடத்தி அரையாண்டு வருமானம் ரூ.21,000/-க்கும் மேல் ஈட்டும் ஒவ்வொரு தனிநபா் / நிறுவனம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு தொழில்வரி செலுத்த தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ. எ ண் | சராசரி அரையாண்டு மொத்த வருமானம் | அரையாண்டு தொழில் வரித்தொகை 01.04.2014 முதல் |
|---|---|---|
| 1. | ரூ. 21000/- வரை | இல்லை |
| 2. | ரூ. 21001/- முதல் ரூ.30000/- வரை | ரூ.127.00 |
| 3 | ரூ. 30001/- முதல் ரூ.45000/- வரை | ரூ.317.00 |
| 4. | ரூ. 45001/- முதல் ரூ.60000/- வரை | ரூ.634.00 |
| 5. | ரூ. 60001/- முதல் ரூ.75000/- வரை | ரூ.950.00 |
| 6. | ரூ.75001/- மேல் | ரூ.1268.00 |

பார்வை(3)ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16723/2014/R4 நாள்.20.08.2014ல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 276(2)ன் 1988ம் வருடத்திய 60வது சட்டத்திருத்ததின் பிரிவு 276(2)ன்படி, அரசு, மாவட்ட அமைப்பகள், நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிவோர்கள், தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனம், நிறுவனத்தில் பணிபுரிவர்களுக்கு வருடத்திற்கு உயர்ந்தபட்சமாக ரூ.2500/- வரை மட்டுமே தொழில் வரி விதிக்க வழி வகையுள்ளது என்பதால், மேற்படி சட்டத்திருத்தின்படி, அரையாண்டு உயர்ந்தபட்ச தொழில்வரி ரூ.1250/- வரை மட்டுமே நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அட்டவணையில் வரிசை எண்.6ல், சராசரி அரையாண்டு மொத்த வருமானம் ரூ.75001/-க்கு மேல் உள்ள இனங்களுக்கு அரையாண்டு தொழில் வரித்தொகையாக ரூ.1268/- செலுத்த நிர்ணயம் செய்யப்பட்டதற்குப் பதிலாக ரூ.1250/-என நிர்ணயம் செய்து வசூலிக்கப்படுவது குறித்து வரிவிதிப்பு மற்றம் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 129 நாள். 20.01.2015ன்படி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ததைத் தொடர்ந்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் „ 9601/2010/எம்ஏ.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 381 நாள் 22.01.2015</u>**

ஒப்பதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோவை மாநகராட்சி புதியதாக இணைக்கப்பட்ட நான்கு மண்டலங்களில் 40 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை அரசு மற்றும் தனியார் கூட்டு ஒப்பந்த PPP(Puplic Private Partnership) முறையில் பராமரிப்பு செய்தல் மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் புதியதாக தெருவிளக்குகள் பொருத்தி பராமரிக்கும் பணிகளை பத்தாண்டுகளுக்கு மேற்கொள்ள அரசாணை எண். 88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 24.9.12-ல் தெரிவித்துள்ளபடியும், அரசாணை எண்.409 நிதி (ஊதியம்) துறைநாள் 26.11.12-ன் படி பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டப்பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு விதிமுறைகளின்படியும் மற்றும் மாமன்றத் தீர்மானம் எண். 92,93,102 மற்றும் 104 நாள் 1.6.12-ல் ஒப்புதல் அளித்துள்ளபடியும் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் தயாரிக்கப்பட்ட RFQ மற்றும் RFP ஒப்பந்தப்புள்ளிகள் 22.3.13 மற்றும் 17.6.13-ல் கோரப்பட்டது.

தகுதிகோரிக்கை விண்ணப்பங்கள் (RFQ)கீழ்கண்ட ஆறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | தி/ள் சிட்டிலும் இந்தியா (பி) லிட் | தி/ள் கேஸ்லாக் ஷெரடர் (பி) லிட் |
| 2 | தி/ள் சபரிஎலக்ட்ரிகல்ஸ் | 1.தி/ள் ஏசியன் எலக்ட்ரிகல்ஸ்<br>2.பைவ்.எம்.எனர்ஜி (பி) லிட் |
| 3 | தி/ள் ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மென்ட்ஸ் | தி/ள் சால்சர் எலக்ட்ரானிக்ஸ் |
| 4 | தி/ள் செயின்ட்ரிட்டாஸ் எலக்ட்ரானிக்ஸ் | தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் |
| 5 | தி/ள் பிலிப்ஸ் எலக்ட்ரானிக்ஸ் | -- |
| 6 | தி/ள் மாஸ்கான்ஸ் கோர் டெக்னாலஜிஸ் | -- |

இதில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் படி தொழல்நுட்ப குழுவால் கலந்தாய்வு செய்யப்பட்டு வரிசை எண்.1,2 மற்றும் 3-ல் உள்ள நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதிவாய்ந்த நிறுவனங்களாக தேர்வு செய்யப்பட்டு இவர்களிடமிருந்து RFP (Request For Proposal) ஒப்பந்தப்புள்ளி 17.6.13 அன்றுகோரப்பட்டது. மேற்படிநிறுவனங்களின் RFP ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப அம்சங்கள் கலந்தாய்வு செய்யப்பட்டதில் மூன்று நிறுவனங்களும் தகுதிபெற்று அந்நிறுவனங்களின் விலைப்புள்ளி உறை 2.7.13 அன்று திறக்கப்பட்டது.

மதிப்பீட்டைகாட்டிலும் முதலாவது கூடுதலாக கொடுத்துள்ள தி/ள்சிட்டிலும் இந்தியா (பி) லிட், புதுடெல்லி நிறுவனத்தார் பணியின் தற்போதைய நிகரமதிப்பு NPV (Net Present Value) ரூ.97,33,606.95 (விலைக்குறைப்பிற்கு பின்)அளித்துள்ளனர்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி உத்தேசித்துள்ள கடிதம் வழங்கியதிலிருந்து மூன்று மாதகால அவகாசத்திற்குள் மின் ஆற்றலுக்கான நேராய்வு செய்து தணிக்கையினை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொண்டு, மின் சேமிப்பு சாதனங்களை 10மாத கால அவகாசத்திற்குள் பொருத்தி கொடுக்க வேண்டும். நேராய்வு செய்த தணிக்கை அறிக்கை தாக்கல் செய்ய மேற்படி நிறுவனம் ரூ.41,48,122 விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ளது.

தி/எ்.சிட்டிலும் இந்தியா (பி) லிட் நியூடெல்லி நிறுவனத்தின் RFP ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் தீர்மானம் எண்.146 நாள் 24.7.13-ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் மேற்படி நிறுவனத்திற்கு 14.8.13-ல் உத்தேசித்துள்ள கடிதம் (Letter Of Intent) வழங்கப்பட்டு மேற்படி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாடுகளின்படி இணைக்கப்பட்ட நான்கு மண்டலத்தில் 40 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் மற்றும் சுவிட்சுகளில் எண்கள் இடுதல், மின்பளுகணக்கிடுதல், மின் விளக்குகளின் ஒளிரும் திறனை கண்டறிதல் இணையதளத்தில் தெருவிளக்குகளுக்கான வரைபடம் தயாரித்தல் மின் பயனீட்டு அளவை கணக்கிடுதல் GPS Mapping. மற்றும் இரண்டாண்டுகளுக்கு தெருவிளக்கு செலுத்தப்பட்ட மின்கட்டண விபரங்களை சேகரித்தல் ஆகிய பணிகளை செய்துமுடித்துள்ளனர். அதன் விபரம் கீழ்கண்டவாறு.

அட்டவணை -1
தெருவிளக்குவிபரம்

| வ. எண் | தெருவிளக்கு விபரங்கள் | ஒப்பந்தப் புள்ளியில் தெரிவிக்கப் பட்டுள்ள தெருவிளக்கு விபரங்கள் | முதலீட்டு தரதணிக்கை செய்யப்பட்டபின்பு கண்டறியப்பட்டதெருவிளக்கு விபரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கிழக்கு | மேற்கு | வடக்கு | தெற்கு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | | | | |
| 1 | 40 Wகுழல் விளக்கு | 19,593 | 2,998 | 5,807 | 3,842 | 5,429 | 18,076 |
| 2 | 70 Wசோடியம் ஆவிவிளக்கு | 356 | -- | 205 | 4 | 34 | 243 |
| 3 | 150Wசோடியம் ஆவிவிளக்கு | 128 | 3 | 4 | 14 | 2 | 23 |
| 4 | 250Wசோடியம் ஆவிவிளக்கு | 2,556 | 347 | 317 | 457 | 917 | 2,038 |
| 5 | 250Wமெர்குரிவிளக்கு | -- | 13 | 7 | 17 | 26 | 63 |
| 6 | 250Wமெட்டல் உறலாய்டு | -- | 7 | 16 | 8 | 12 | 43 |
| 7 | 400Wசோடியம் ஆவிவிளக்கு | -- | -- | -- | 36 | -- | 36 |
| 8 | 400Wமெட்டல் உறலாய்டு | 356 | -- | 48 | 5 | 196 | 249 |
| 9 | 1 X 36 Wசி.எப்.எல் விளக்கு | 1,352 | 9 | 335 | 353 | | 697 |
| 10 | 2 X 36 Wசி.எப்.எல் விளக்கு | 1,404 | 11 | 189 | 734 | 915 | 1,849 |
| 11 | 2X 24 Wசி.எப்.எல் விளக்கு | 153 | 83 | 63 | 5 | -- | 151 |
| 12 | 1 X 65 Wசி.எப்.எல் விளக்கு | 95 | 30 | 64 | -- | -- | 94 |
| 13 | 4X 24 Wசி.எப்.எல் விளக்கு | 1,384 | 906 | 376 | 133 | 221 | 1,636 |
| 14 | 2 X 25 Wசி.எப்.எல் விளக்கு | -- | 13 | 8 | 6 | -- | 27 |
| 15 | 1 X 45 Wசி.எப.எல் விளக்கு | -- | 27 | 41 | 3 | -- | 71 |
| 16 | 1 X 85 Wசி.எப்.எல் விளக்கு | 96 | -- | -- | -- | -- | -- |
| | மொத்தம் | 27,473 | 4,447 | 7,480 | 5,617 | 7,752 | 25,296 |

அட்டவணை -2
சுவிட்சுகளின் விபரம்

| வ.எண் | தெருவிளக்குசுவிட்சுகள் விபரங்கள் | ஒப்பந்தப் புள்ளியில் தெரிவிக்கப் பட்டுள்ள தெருவிளக்கு சுவிட்சுகள் விபரங்கள் | கிழக்கு | மேற்கு | வடக்கு | தெற்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | | | | |
| 1 | ஒருமுனை இணைப்பு | 1,598 | 276 | 416 | 389 | 543 | 1,624 |
| 2 | இருமுனை இணைப்பு | -- | 1 | 4 | 6 | 9 | 20 |
| | மொத்தம் | 1,598 | 277 | 420 | 395 | 552 | 1,644 |

மேற்கண்ட விபரப்படி தி/எ்.சிட்டிலும் இந்தியா (பி) லிட் நியூடெல்லி நிறுவனம் நான்கு மண்டலத்தில் உள்ள தெருவிளக்கு மற்றும் தெருவிளக்கு சுவிட்சுகளில் முதலீட்டு தரதணிக்கை செய்து (IGA) மின் இணைப்பு வாரியாக ஒருவருடத்திற்கான மின் பயனீட்டு அளவினை (Baseline) அடிப்படையாக கொண்டு முதலீட்டு தரதணிக்கை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அதனை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் நியமனம் செய்யப்பட்ட மூன்றாம் நபர் (M/s. TUV SUD South Asia, Chennai, Third Party Agency) நிறுவனத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மூன்றாம் நபர் ஆய்வுப் பணி மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் மின் சேமிப்பு நிறுவன பிரதிநிதிகளுடன் கிழக்குமண்டலம் 03.05.2014, வடக்குமண்டலம் 07.05.2014, மேற்குமண்டலம் 29.05.2014 மற்றும் தெற்குமண்டலம் 02.06.2014 ஆகிய தேதிகளில் முடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி முதலீட்டு தரதணிக்கை செய்யும் பணிமுடிவுற்றவுடன் எல்.இ.டி மின் விளக்குகள் மற்றும் மின் சக்திசேமிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டியுள்ளது.

அதன்படி மேற்கண்ட அட்டவணை(1) மற்றும் (2) கலம் எண் (4)-ல் கண்டுள்ள விபரப்படி நான்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 4’-36/40வாட்ஸ் குழல் விளக்குகளை அகற்றிவிட்டு 15வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றியமைக்கவும் மற்றும் தெருவிளக்கு சுவிட்சுகளில் மின்சக்தி சேமிப்பு உபகரணங்களை வழங்கி பொருத்தி இயக்குவதற்கு தி/ள்.சிட்டிலும் இந்தியா (பி) லிட் நியூடெல்லி நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியின் விலைவிபரங்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் தலைமையில் தொழல்நுட்ப வல்லுநர் குழு 40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு பதிலாக 15 வாட்ஸ் எல்.இ.டி விளக்கினை அமைக்க கடித எண்.36231/2011/இ1நாள் 13.5.14 அனுமதி வழங்கி உள்ளது.

அட்டவணை -3

(தெருவிளக்கு மின்சக்தி சேமிப்பு உபகரணங்களின் விலை விபரம்)

| வ. எண் | விபரம் | | மதிப்பீடு தொகை | எண்ணிக்கை | ஒப்பந்தப் புள்ளியின்படி ஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்த செலவினத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) |
| 1 | 4’-36/40வாட்ஸ் குழல் விளக்குகளைஅகற்றிவிட்டுஒப்பந்தப்புள்ளிகட்டுப்பாடுகள் விதி எண்.8-ன் படி மின்சக்திசேமிப்புத் திறன் கொண்ட15 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளாகமாற்றுதல் | | 3,500.00 | 18,076 | 6,700.00 | 12,11,09,200.00 |
| 2 | தெருவிளக்குகளைகட்டுப்படுத்தும் கருவி(Street Light Controller Unit) LEDமின் விளக்குகளுக்குமட்டும் | | 12,000 | 1,603 | 35,000.00 | 5,61,05,000.00 |
| 3 | மின்சக்திசேமிப்பு உபகரணம் (Voltage Controller) | 8 KVA -1 Phase | 32,690 | 21 | 12,000.00 | 2,52,000.00 |
| | | 12 KVA - 3 Phase | 91,537 | 20 | 12,000.00 | 2,40,000.00 |
| 4 | தனிப்பட்டதெருவிளக்குகண்காணிப்பு சாதனம் (Individual Lamp Monitoring Device) | | 3,300.00 | 1,266 | 13,000.00 | 1,64,58,000.00 |
| 5 | இணையதளகண்காணிப்பு மையம் அமைப்பதற்கானசெலவினம் (Centralized Monitoring Station) நான்குமண்டலத்திற்கும் சேர்த்தது | | 12,66,993 | 1 | 30,00,000.00 | 30,00,000.00 |
| 6 | மென்பொருள் இயக்குவதற்கு(Packweb) | | | 1 | 10,00,000.00 | 10,00,000.00 |
| | | | | | மொத்தம் | 19,81,64,200.00 |

மேற்கண்ட அட்டவணைப்படி 15 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றியமைக்கவும் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்களை வழங்கி பொருத்தி இயக்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.19,81,64,200.00 ஆகும்.

தி/ள்.சிட்டிலும் இந்தியா (பி) லிட். நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு வேலை உத்தரவு வழங்கிய பின் எல்.இ.டி மின் விளக்குகள் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் பொருத்த ஆகும் கால அவகாசம் ஒப்பந்தவிதிகளின்படி 10 மாதங்கள் ஆகும். அதுவரை இந்நிறுவனம் மூலம் தெருவிளக்குகளை இயக்கி மற்றும் பராமரிக்க வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

அட்டவணை -4

| வ. எண் | தெருவிளக்குகளின் வகைகள் | எண்ணிக்கை | ஒப்பந்தப் புள்ளியின்படி ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகை ஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்தம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | 40 Wகுழல் விளக்கு | 18,076 | 460 | 8314960.00 |
| 2 | 70 Wசோடியம் ஆவிவிளக்கு | 243 | 460 | 111780.00 |
| 3 | 150Wசோடியம் ஆவிவிளக்கு | 23 | 460 | 10580.00 |
| 4 | 250Wசோடியம் ஆவிவிளக்கு | 2,038 | 460 | 937480.00 |
| 5 | 250Wமெர்குரிவிளக்கு | 63 | 460 | 28980.00 |
| 6 | 250Wமெட்டல் உறலாய்டு | 43 | 460 | 19780.00 |
| 7 | 400Wசோடியம் ஆவிவிளக்கு | 36 | 460 | 16560.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 400Wமெட்டல் உறலாய்டு | 249 | 475 | 118275.00 |
| 9 | 1 X 36 Wசி.எப்.எல் விளக்கு | 697 | 460 | 320620.00 |
| 10 | 2 X 36 Wசி.எப்.எல் விளக்கு | 1,849 | 460 | 850540.00 |
| 11 | 2X 24 Wசி.எப்.எல் விளக்கு | 151 | 460 | 69460.00 |
| 12 | 1 X 65 Wசி.எப்.எல் விளக்கு | 94 | 460 | 43240.00 |
| 13 | 4X 24 Wசி.எப்.எல் விளக்கு | 1,636 | 460 | 752560.00 |
| 14 | 2 X 25 Wசி.எப்.எல் விளக்கு | 27 | 460 | 12420.00 |
| 15 | 1 X 45 Wசி.எப.எல் விளக்கு | 71 | 460 | 32660.00 |
| | மொத்தம் | 25,296 | | 1,16,39,895.00 |

நான்கு மண்டலத்திற்குட்பட்ட 40 வார்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு தரதணிக்கை அறிக்கையில் உள்ள 25,296 தெருவிளக்குகளை இயக்கி மற்றும் பராமரிக்க உத்தேச மதிப்பீட்டு தொகை கீழ்கண்டவாறு. பராமரிப்புத் தொகை திருப்பூர் மாநகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தலைமை பொறியாளர் தனது கடித எண்.048464/Do1/(Elec)/ORM/2010/MD2 நாள்.03.11.10ல் அனுமதி வழங்கியுள்ளார்.

அட்டவணை - 5

| வ.எண் | தெருவிளக்குகளின் வகைகள் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளியின்படிஓராண்டிற்குபராமரிப்புத் தொகைஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்தம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | 40 Wகுழல் விளக்கு | 18076 | 300 | 5422800.00 |
| 2 | 70 Wசோடியம் ஆவிவிளக்கு | 243 | 958 | 232794.00 |
| 3 | 150Wசோடியம் ஆவிவிளக்கு | 23 | 1234 | 28382.00 |
| 4 | 250Wசோடியம் ஆவிவிளக்கு | 2038 | 1504 | 3065152.00 |
| 5 | 250Wமெர்குரிவிளக்கு | 63 | 1504 | 94752.00 |
| 6 | 250Wமெட்டல் உறலாய்டு | 43 | 1504 | 64672.00 |
| 7 | 400Wசோடியம் ஆவிவிளக்கு | 36 | 1504 | 54144.00 |
| 8 | 400Wமெட்டல் உறலாய்டு | 249 | 2339 | 582411.00 |
| 9 | 1 X 36 Wசி.எப்.எல் விளக்கு | 697 | 413 | 287861.00 |
| 10 | 2 X 36 Wசி.எப்.எல் விளக்கு | 1849 | 806 | 1490294.00 |
| 11 | 2X 24 Wசி.எப்.எல் விளக்கு | 151 | 740 | 111740.00 |
| 12 | 1 X 65 Wசி.எப்.எல் விளக்கு | 94 | 756 | 71064.00 |
| 13 | 4X 24 Wசி.எப்.எல் விளக்கு | 1636 | 1480 | 2421280.00 |
| 14 | 2 X 25 Wசி.எப்.எல் விளக்கு | 27 | 740 | 19980.00 |
| 15 | 1 X 45 Wசி.எப.எல் விளக்கு | 71 | 584 | 41464.00 |
| | மொத்தம் | 25296 | | 1,39,88,790.00 |

எல்.இ.டி மின் விளக்குகள் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டபின்பு முதல் மற்றும் இரண்டாம் ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிபரம் கீழ்காணும் விபரப்படிதெரிவிக்கப்படுகிறது.

அட்டவணை - 6

| வ.எண் | தெருவிளக்குகளின் வகைகள் | எண்ணிக்கை | ஒப்பந்தப் புள்ளியின்படி ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகைஒன்றின் விலை (ரூபாயில்) | மொத்தம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | மின்சக்திசேமிப்புத் திறன் கொண்ட15W எல்.இ.டி மின் விளக்குகள் | 18,076 | 493.00 | 89,11,468.00 |
| 2 | Single phase Voltage Controller – 8KVA | 21 | 400.00 | 8,400.00 |
| 3 | Three Phase Voltage Controller – 12KVA | 20 | 400.00 | 8,000.00 |
| 4 | தெருவிளக்குகட்டுப்படுத்தும் கருவி(Street Light Controller Unit) LEDமின் விளக்குகளுக்குமட்டும் | 1,603 | 400.00 | 6,41,200.00 |
| 5 | தனிப்பட்டதெருவிளக்குகண்காணிப்பு சாதனம் (Individual Lamp Monitoring Device) | 1,266 | 150.00 | 1,89,900.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | இணையதளகண்காணிப்பு மையம் அமைப்பதற்கானசெலவினம் (Centralized Monitoring Station) நான்குமண்டலத்திற்கும் சேர்த்தது | 1 | 2,00,000.00 | 2,00,000.00 |
| 7 | 70Wசோடியம் ஆவிவிளக்கு | 243 | 200.00 | 48,600.00 |
| 8 | 250Wசோடியம் ஆவிவிளக்கு | 2,038 | 250.00 | 5,09,500.00 |
| 9 | 150Wசோடியம் ஆவிவிளக்கு | 23 | 225.00 | 5,175.00 |
| 10 | 250Wமொ்குரிவிளக்கு | 63 | 250.00 | 15,750.00 |
| 11 | 250Wமெட்டல் உறலாய்டு | 43 | | 10,750.00 |
| 12 | 400Wசோடியம் ஆவிவிளக்கு | 36 | 250.00 | 9,000.00 |
| 13 | 400Wமெட்டல் உறலாய்டு | 249 | 250.00 | 62,250.00 |
| 14 | 1 X 36 Wசி.எப்.எல் விளக்கு | 697 | 200.00 | 1,39,400.00 |
| 15 | 2 X36Wசி.எப்.எல் விளக்கு | 1,849 | 210.00 | 3,88,290.00 |
| 16 | 4 X 24 Wசி.எப்.எல் விளக்கு | 1,636 | 230.00 | 3,76,280.00 |
| 17 | 2 X 24 Wசி.எப்.எல் விளக்கு | 151 | 230.00 | 34,730.00 |
| 18 | 2X 25 Wசி.எப்.எல் விளக்கு | 27 | | 6,210.00 |
| 19 | 1 X 65 Wசி.எப்.எல் விளக்கு | 94 | 210.00 | 19,740.00 |
| 20 | 1 X 45 Wசி.எப்.எல் விளக்கு | 71 | 200.00 | 14,200.00 |
| மொத்தம் | | | | 1,15,98,843.00 |

மேற்கண்டவாறு எல்.இ.டி மின் விளக்குகள் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்ட பின்பு தெருவிளக்குகளை இயக்கி பராமரிக்க முதல் இரண்டு ஆண்டிற்கு ரூ.1,15,98,843.00 செலவாகும்.

அட்டவணை 5-ல் உள்ளபடி தெருவிளக்குகளை ஓராண்டிற்கு இயக்கி பராமரிக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,39,88,79.00 செலவாகும். ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி ஆண்டிற்கு மேற்படி உத்தேச மதிப்பீடு தொகைக்கு 16 சதவீதம் குறைவாக செலவின சேமிப்பு இருக்க வேண்டும். அட்டவணை 6-ல் உள்ளபடி தெருவிளக்குகளை இயக்கி பராமரிக்க ஆண்டிற்கு ஒப்பந்தப் புள்ளி விலை ரூ.1,15,98,843.00,ஆகும். இது மதிப்பீடு தொகைக்கு 17.08 சதவீதம் செலவின சேமிப்பு ஆகும்.

ஒப்பந்தப்புள்ளியை தணிக்கை செய்ததில் மற்ற மாநகராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளியுடன் ஒப்பிட்டு பாா்கையில் தி/ள்.சிட்டிலூம் இந்தியா (பி) லிட். நிறுவனத்தால் 15W LED தெருவிளக்கு பராமரிப்பிற்காக ஓராண்டுடிற்கு குறிப்பிடப்பட்ட விலை விகிதம் ரூ.493/ மிகவும் அதிகமாக உள்ளது. எனவே அதனை நியாயப்படுத்தும் அளவிற்கு தங்கள் நிறுவனத்தின் விளக்கம் ந.க.எண்.3478/12/MD4 நாள்.27.05.14 அன்று கோரப்பட்டது.

இப்பொருள் சம்பந்தமாக மேற்படி நிறுவன பிரதிநிதிகள் ஆணையா் மற்றும் மாநகராட்சி அலுவலா்களுடன் பிரதான அலுவலகத்தில் 09.07.14 மற்றும் 15.07.14ல் நியாயப்படுத்திய விளக்கதினை Power Point Presentation மூலமாக விளக்கினா். அதனை பாா்வையிட்ட பின்பு ஆணையா் மேற்படி நிறுவனம் 15W LED தெருவிளக்கினை இயக்கி பராமரிக்கும் விலையினை கணிசமாக குறைக்குமாறு கேட்டு கொண்டாா்.

அதனை தொடா்ந்து மேற்படி நிறுவனத்தின் நியாயப்படுத்திய விளக்கம் 06.08.14ல் பெறப்பட்டது. அவ்விளக்கத்தை ஆராய்ந்து பாா்த்ததில் அவ்விளக்கம் ஒத்துக் கொள்ளும் அளவில் இல்லை. இதனை தொடா்ந்து மேற்படி நிறுவனத்தால் தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்க ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட விலையினை பற்றி தெளிவுரை உத்தரவு நகராட்சி நிா்வாக ஆணையரிடம் 16.08.14ல் கோரப்பட்டது.

ஒப்பந்ததாரா் தெருவிளக்குகளை பராமரிக்க 15W LEDக்கு குறிப்பிட்டுள்ள விலை அதிகபட்சவிலை ரூ.493/- மற்றும் 250W SVL & CFL விளக்குகளுக்கு மிக குறைந்தபட்ச விலையாக ரூ.250/-க்கு உட்பிரிவு விபரங்கள் 11.11.14 மற்றும் 21.11.14ல் கோரப்பட்டது. மேற்படி கடிதங்களுக்கு பதிலளிக்கும் முறையில் மேற்படி நிறுவனத்தால் குறிப்பிடப்பட்ட உட்பிரிவு விலை விவரங்கள் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளும் அளவில் இல்லை.

மேற்படி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு தர தணிக்கை (IGA) அதாவது 40 வாா்டுகளில் உள்ள தெருவிளக்குள் மற்றும் சுவிட்சுகளில் எண்கள் இடுதல், மின்பளு கணக்கிடுதல், மின் விளக்குகளின் ஒளிரும் திறனை கண்டறிதல், இணையதளத்தில் தெருவிளக்குகளுக்கான வரைபடம் தயாரித்தல், மின் பயனீட்டு அளவை கணக்கிடுதல் ஆகியவற்றை இனம் வாரியாக பிரித்து நகராட்சி நிா்வாக ஆணையகத்தால் நியமிக்கப்பட்ட மூன்றாம் நபா் (M/s. TUV SUD South Asia, Chennai, Third Party Agency) நிறுவனத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில் ESCO தி/ள்.சிட்டிலூம் இந்தியா (பி) லிட். சமா்பித்த ஆவனங்கள் திருப்திகரமாக உள்ளது என மூன்றாம் நபா் நிறுவனம் தனது 20.11.14ம் தேதிய ஆய்வறிக்யைில் தெரிவித்துள்ளனா்.

மேற்படி நிறுவனம் சமா்ப்பித்த உட்பிரிவு விலை விபரங்கள் ஏற்றுக் கொள்ளும் அளவில் இல்லாததால் இந்நிறுவனம் சமா்பித்த ஒப்பந்தப்புள்ளியினை ஏன் நிராகரிக்க கூடாது என விளக்கம் கோரி ஒப்பந்ததாரருக்குக் 18.12.2014ல் முதலாவது அறிவிப்பும் 31.12.2014ல் இரண்டாவது அறிவிப்பும் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனம் தனது 12.01.2015 ஆம் தேதிய வளையதள பதிலில் மேற்படி பணியானது உள்ளீட்டு சதவீதத்தின்(IRR) அடிப்படையில் ஆனது என்றும் தனிப்பட்ட இனத்தின் அடிப்படையில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார் மேற்படி விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. மேலும் மேற்படி நிறுவனம் சமர்பித்த ஒப்பந்தப்புள்ளியில் புதியதாக சோடியம் ஆவி விளக்கு, சி.எப்.எல் விளக்கு மற்றும் உயர் மட்ட கோபுர விளக்கு அமைக்க வழிவகை இல்லை. எனவே ஆணையாளர் தனது 19.01.2015 தேதிய உத்திரவில் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

முதலீட்டு தரதணிக்கை முடிவுற்று அதன் அறிக்கை மூன்றாம் நபர் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு Base Line மின்இணைப்பு வாரியாக சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே மறுஒப்பந்தப்புள்ளியின் போது மீண்டும் முதலீட்டு தரதணிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

எனவே ஒப்பந்த நிறுவனத்தின் விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததால் தி/ள்.சிட்டிலும் இந்தியா (பி) லிட் புதுடெல்லி நிறுவனத்தார் சமர்பித்த ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யததற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. தி/ள்.சிட்டிலும் இந்தியா (பி) லிட் புதுடெல்லி நிறுவனத்தார் சமர்பித்த ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யலாம்.
2. ஆணையாளர் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்ததை அனுமதிக்கலாம்.
3. மேற்படிபணிக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
4. தி/ள்.சிட்டிலும் இந்தியா (பி) லிட் புதுடெல்லி நிறுவனத்தாருக்கு முதலீட்டு தரதணிக்கை 40 வார்டுகளில் மேற்கொண்டு மாநகராட்சிக்கு தாக்கல் செய்ததற்கான தொகை ரூ.41,48,122-யை பொது நிதியிலிருந்து மறுஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்பத்திரம் மேற்கொண்ட பிறகு வழங்கலாம்.

ந.க.எண். 3478/12/MD4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 382 நாள் 22.01.2015</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

பொருள் உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் -வார்டு எண் 69-இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் -தொடர்பாக

பார்வை
1. அரசாணை எண் 92, நாள் : 03.07.2007
2. மாமன்ற தீர்மான எண் 55, நாள் : 30.05.2012.
3. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்திரவு நாள் :23.08.2012.
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 120 நாள்:20.01.2015

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்குமண்டலம் வார்டு எண் 69, இராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகளுக்கு 2012-15-ம் ஆண்டிற்கு பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் சந்தை மதிப்பீட்டின்படி 9 ஆண்டுகள் உரிமம் முடிவுற்ற கடைகளுக்கு வாடகை மறு மதிப்பீடு செய்து உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2015 உடன் மூன்றாண்டுகள் முடிவடைவதால் அரசு ஆணையின்படி சென்ற ஆண்ட வாடகையில் 15 % வாடகை உயர்வு செய்து 01.04.2015 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம நீட்டிப்பு வழங்கியும் கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வரிவதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை | 01.04.2015 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 6910001 | யு.கீதா | 9048 | 1357 | 10405 |
| 2. | 6910002 | யு.கீதா | 9048 | 1357 | 10405 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | 6910003 | பி. ருக்மணி | 9048 | 1357 | 10405 |
| 4. | 6910004 | ரபிக் மூஷா | 9048 | 1357 | 10405 |
| 5. | 6910005 | ஆர். சின்னச்சாமி | 9048 | 1357 | 10405 |
| 6. | 6910006 | மோகன ராமச்சந்திரன் | 9048 | 1357 | 10405 |
| 7. | 6910007 | ராஜேந்திரன் | 9048 | 1357 | 10405 |
| 8. | 6910008 | ராஜேந்திரன் | 9048 | 1357 | 10405 |
| 9. | 6910009 | எம். எ. கிருஷ்ணசாமி | 9048 | 1357 | 10405 |
| 10. | 6910010 | கே. மாரிமுத்து | 9048 | 1357 | 10405 |
| 11. | 6910011 | பி.எம். அப்துல் காதர் | 9048 | 1357 | 10405 |
| 12. | 6910012 | கே. ராஜாராம் | 9048 | 1357 | 10405 |
| 13. | 6910013 | பி. ராஜேந்திரன் | 9048 | 1357 | 10405 |
| 14. | 6910014 | எ. பாக்கியசாமி | 9048 | 1357 | 10405 |
| 15. | 6910015 | சி. செந்தில்குமார் | 9048 | 1357 | 10405 |
| 16. | 6910016 | வி.கே. செந்தில்குமார் | 9048 | 1357 | 10405 |
| 17. | 6910017 | சி.வி. சேஷாத்திரி | 9048 | 1357 | 10405 |
| 18. | 6910018 | ஆர். ரவீந்திரராஜ். | 9048 | 1357 | 10405 |
| 19. | 6910019 | சாமியப்பன் | 9048 | 1357 | 10405 |
| 20. | 6910020 | முகமது இஸ்மாயில் | 9048 | 1357 | 10405 |
| 21. | 6910021 | ஹபீப் ரஹ்மான் | 9048 | 1357 | 10405 |

மேற்படி கடைகளின் குத்தகைதாரர்கள் உரிம நீட்டிப்பு கட்டணம் ரூ.1000/- செலுத்தி உரிம நீட்டிப்பு வேண்டி மனு செய்யும் பட்சத்தில் கலம் எண் 6-ல் கண்டுள்ள புதிய வாடகையை நிர்ணயம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம். உரிம நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரர்களின் உரிமத்தை இரத்து செய்து குத்தகைதாரர்களின் வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்து கடைகளை மறுஏலம் விட, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 120 நாள் 20.01.2015 -ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் : 53 /2015/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 383 நாள் 22.01.2015**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 14**

பொருள் உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் -வார்டு எண் 69- புலியகுளம் ரோடு மாநகராட்சி சமுதாயக்கூடத்திற்கு (மெர்சி ஹோம்) உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் -தொடர்பாக.

ே

பார்வை 1. மாமன்ற தீர்மான எண் 265, நாள்: 29.11.2012.

2. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்திரவு நாள் : 07.12.2012.

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்:115 , நாள்:20.01.2015.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்குமண்டலம் வார்டு எண் 69, புலியகுளம்ரோடு மாநகராட்சி சமுதாயக்கூடத்திற்கு (மெர்சி ஹோம்) 2012-15-ம் ஆண்டிற்கு பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் 3 ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி சமுதாயக்கூடத்திற்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2015 உடன் மூன்றாண்டுகள் முடிவடைவதால் அரசு ஆணையின்படி சென்ற ஆண்டு வாடகையில் 15 % வாடகை உயர்வு செய்து 01.04.2015 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம நீட்டிப்பு வழங்கி கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வரிவதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை | 01.04.2015 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 6910090 | நிறுவனர்,மெர்சி ஹோம் | 2500 | 375 | 2875 |

மேற்படி சமதாயக்கூடத்தின் குத்தகைதாரர், உரிம நீட்டிப்பு செய்ய கட்டணம் ரூ.1000/- செலுத்தி உரிம நீட்டிப்பு வேண்டி மனு செய்யும் பட்சத்தில் கலம் எண் 6-ல் கண்டுள்ள புதிய வாடகையை நிர்ணயம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம்.

உரிம நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத பட்சத்தில் உரிமதாரரின் உரிமத்தை இரத்து செய்து வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து மறுஏலம் விட, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 115, நாள்:20.01.2015-ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் : 10881 /2012/கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 384 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் -வார்டு எண் 67- திருச்சி ரோடு இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்றது - மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக

பார்வை 1. அரசாணை எண் 92, நாள் : 03.07.2007

2. மாமன்ற தீர்மான எண் 55, நாள் : 30.05.2012.
3. மாமன்ற தீர்மான எண் 234, நாள் : 24.09.2012.
4. மாமன்ற தீர்மான எண் 266, நாள் : 29.11.2012
5. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்திரவு நாள் :
6. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 114, நாள் :20.01.2015

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்குமண்டலம் வார்டு எண் 67, திருச்சி ரோடு இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகளுக்கு 2012-15-ம் ஆண்டிற்கு பார்வைகளில் காணும் மாமன்ற தீர்மானத்தில் சந்தை மதிப்பீட்டின்படி 9 ஆண்டுகள் உரிமம் முடிவுற்ற கடைகளுக்கு வாடகை மறு மதிப்பீடு செய்து உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2015 உடன் மூன்றாண்டுகள் முடிவடைவதால் அரசு ஆணையின்படி சென்ற ஆண்டு வாடகையில் 15 % வாடகை உயர்வு செய்து 01.04.2015 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம நீட்டிப்பு வழங்கி, கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வரிவதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை | 01.04.2015 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 6710022 | எ. இஸ்மத்துல்லா | 12112 | 1817 | 13929 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | 6710023 | தங்கராஜ் | 16502 | 2475 | 18977 |
| 3. | 6710024 | தங்கராஜ் | 6125 | 919 | 7044 |
| 4. | 6710025 | வேலாயுதம் | 6125 | 919 | 7044 |
| 5. | 6710026 | கே. சரஸ்வதி | 6125 | 919 | 7044 |
| 6. | 6710027 | வசந்தகுமாரி | 6125 | 919 | 7044 |
| 7. | 6710028 | முகமது சா்புதீன் | 6125 | 919 | 7044 |
| 8. | 6710029 | பாதாள முத்து நாடாா் | 6125 | 919 | 7044 |
| 9. | 6710030 | பாதாள முத்து நாடாா் | 6125 | 919 | 7044 |
| 10. | 6710031 | எஸ். குமரவேல் | 6125 | 919 | 7044 |

மேற்படி கடைகளின் குத்தகைதாரா்கள் உரிம நீட்டிப்பு கட்டணம் ரூ.1000/- செலுத்தி உரிம நீட்டிப்பு வேண்டி முன செய்யும் பட்சத்தில் கலம் எண் 6-ல் கண்டுள்ள புதிய வாடகையை நிா்ணயம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம்.

உரிம நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரா்களின் உரிமத்தை இரத்து செய்து குத்தகைதாரா்களின் வைப்புத் தொகைகளை பறிமுதல்செய்து கடைகளை மறுஏலம் விட, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண்114 நாள்:20.01.2015-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் : 52/2015/கிஅ11

**மாநகர மன்ற தீா்மானம் எண் 385 நாள் 22.01.2015**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 16**

பொருள் குத்தகை – கோயம்புத்தூா் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வாா்டு எண் 67- மாநகராட்சி மருதூா் திருமண மண்டபத்தை 06.01.2014-ம் தேதிய ஏல நடவடிக்கையின்படி ஸ்ரீ கணபதி சுயஉதவிக்குழு, இராமநாதபுரம் என்ற குழுவிற்கு ஒப்படைப்பு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடா்பாக.

பாா்வை 1.ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள் :19.12.2014.

2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 131 , நாள் : 20.01.2015

-------------

கோயம்புத்தூா் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வாா்டு எண் 67-ல் மாநகராட்சி திருமண மண்டபத்தில் பாா்வை (1)-ல் காணும் மாமன்ற தீா்மானத்தில் சுய உதவிக்குழுக்கள் மட்டுமே கலந்து கொள்ளும் வகையில் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு கடந்த 18.06.2014, 02.07.2014 , 23.07.2014, 13.08.2014 மற்றும் 06.11.2014 ஆகிய தேதிகளில் 5 முறை ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இவற்றில் 5-வது முறையாக கலந்து கொண்ட கீழ்க்கண்டுள்ள இரண்டு சுயஉதவிக்குழுக்கள் ஏலக்கேள்வி பதிவு செய்துள்ளனா்.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்ட சுய உதவிக்குழுக்கள் | ஏலத்தொகை ஆண்டிற்கு ரூ |
|---|---|---|
| 1. | ஸ்ரீ கணபதி மகளிா் சுய உதவிக்குழு, இராமநாதபுரம், கோவை | 77000/- |
| 2. | ஸ்ரீ நக்ஷத்ரா மகளிா் சுய உதவிக்குழு, கோவை | 51000/- |

மேற்காணும் குத்தகை இனத்திற்கு மாநகராட்சி மதிப்பாக ஆண்டுக்கு ரூ.1,20,000/- என நிா்ணயம் செய்யப்பட்டது. ஆனால் மேற்படி சுய உதவிக்குழுக்கள் மாநகராட்சி மதிப்பிற்கு இணையாக ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்ய முன்வரவில்லை.

மேற்படி மருதூா் திருமண மண்டபத்தை மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்ய ஆண்டொன்றுக்கு ரூ.3,50,000/- செலவு செய்யப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி மூலம் மேற்படி மண்டபத்தில் ஆண்டிற்கு ரூ. 1,14,667/- சராசரியாக கிடைக்கப் பெறுகிறது. மேற்படி வருவாயையும் ஆணடுட பராமரிப்பு செலவையும் கணக்கிடும் பொழுது மாநகராட்சிக்கு இழப்பு மட்டுமே ஏற்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி கோரியுள்ள சுயஉதவிக்குழுவினருக்கு திருமண மண்டபத்தை தாங்களே பராமரிப்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்படைக்கும் பட்சத்தில் மாநகராட்சிக்கு நிரந்தர வருவாய் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே 06.11.2014 –ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஸ்ரீ கணபதி மகளிா் சுயஉதவிக்குழு பதிவு செய்துள்ள உச்சக் கேள்வித்தொகை ரூ.77000/-க்கு ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 131 , நாள் : 20.01.2015- ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் :15875/2013/கிஅ11

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 386 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 17**

பொருள் உரிமம் - கோயம்புத்தூா் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வாா்டு எண் 64, சிங்காநல்லூா் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மீன் வளா்ச்சிக்கழகம் விற்பனைக்கூடத்தின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடா்பாக

பாா்வை 1. மாமன்ற தீா்மான எண் 368, நாள்: 31.01.2013.

2. ஆணையாளா், கோயம்புத்தூா் மாநகராட்சி அவா்களின் உத்திரவு நாள் :

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 119 , நாள் : 20.01.2015

----------------

கோயம்புத்தூா் மாநகராட்சி கிழக்குமண்டலம் வாா்டு எண் 64,சிங்காநல்லூா் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மீன் வளா்ச்சிக்க ழகம் விற்பனைக்கூடத்திற்கு 2013-15-ம் ஆண்டிற்கு பாா்வை (1)-ல் காணும் மாமன்ற தீா்மானத்தில் உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி தமிழ்நாடு அரசு மீன் வளா்ச்சிக்கழகம் விற்பனைக்கூடத்திற்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் அரசு ஆணையின்படி சென்ற ஆண்டு வாடகையில் 15 % வாடகை உயா்வு செய்து 01.04.2015 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம நீட்டிப்பு வழங்கி கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிா்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வரிவதிப்பு எண் | குத்தகைதாரா் பெயா் | பழைய வாடகை | 15% உயா்வு செய்யப்பட வேண்டிய வாடகை | 01.04.2015 முதல் உயா்வு செய்யப்பட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 6410086 | தமிழ்நாடு அரசு மீன் வளா்ச்சிக்கழகம் விற்பனைக்கூடம் | 1840 | 276 | 2116 |

மேற்படி தமிழ்நாடு அரசு மீன் வளா்ச்சிக்கழகம் விற்பனைக்கூடத்தின் குத்தகைதாரா், உரிம நீட்டிப்பு செய்ய கட்டணம் ரூ.1000/- செலுத்தி உரிம நீட்டிப்பு வேண்டி மனு செய்யும் பட்சத்தில் கலம் எண் 6-ல் கண்டுள்ள புதிய வாடகையை நிா்ணயம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம்.

உரிம நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத பட்சத்தில் உரிமதாரரின் உரிமத்தை இரத்து செய்து வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து மறுஏலம் விட, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 119, நாள் : 20.01.2015- ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் :8315/2010/கிஅ11

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 387 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 18**

பொருள் உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 64, சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள விஜயா பதிப்பகம் புத்தக நிலையத்திற்கு உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை 1. மாமன்ற தீர்மான எண் 368, நாள்: 31.01.2013.

2. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்திரவு நாள் :

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் :118 நாள் : 20.01.2015

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்குமண்டலம் வார்டு எண் 64, சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள விஜயா பதிப்பகம் புத்தக நிலையத்திற்கு 2013-15-ம் ஆண்டிற்கு பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி புத்தக நிலையத்திற்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் அரசு ஆணையின்படி சென்ற ஆண்டு வாடகையில் 15 % வாடகை உயர்வு செய்து 01.04.2015 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம நீட்டிப்பு வழங்கி கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வரிவதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை | 01.04.2015 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 6410087 | விஜயா பதிப்பகம் | 230 | 35 | 265 |

மேற்படி புத்தக நிலையத்தின் குத்தகைதாரர், உரிம நீட்டிப்பு செய்ய கட்டணம் ரூ.1000/- செலுத்தி உரிம நீட்டிப்பு வேண்டி மனு செய்யும் பட்சத்தில் கலம் எண் 6-ல் கண்டுள்ள புதிய வாடகையை நிர்ணயம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம்.

உரிம நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத பட்சத்தில் உரிமதாரரின் உரிமத்தை இரத்து செய்து வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து மறுஏலம் விட, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் :118, நாள்:20.01.2015-ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் :7405 /2010/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 388 நாள் 22.01.2015**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 19**

பொருள் உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் -வார்டு எண் 63- திருச்சி ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்றது – மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக

பார்வை 1.அரசாணை எண் 92, நாள் : 03.07.2007

2. மாமன்ற தீர்மான எண் 55, நாள் : 30.05.2012.

3. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்திரவு நாள் :23.08.2012.

4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 116 நாள் : 20.01.2015

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்குமண்டலம் வார்டு எண் 63, திருச்சி ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடைகளுக்கு 2012-15-ம் ஆண்டிற்கு பார்வைகளில் காணும் மாமன்ற தீர்மானத்தில் சந்தை மதிப்பீட்டின்படி 9 ஆண்டுகள் உரிமம் முடிவுற்ற கடைகளுக்கு வாடகை மறு மதிப்பீடு செய்து உரிமம் வழங்கப்பட்டது. மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2015

உடன் மூன்றாண்டுகள் முடிவடைவதால் அரசு ஆணையின்படி சென்ற ஆண்டு வாடகையில் 15 % வாடகை உயா்வு செய்து 01.04.2015 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம நீட்டிப்பு வழங்கி, கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிா்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வரிவதிப்பு எண் | குத்தகைதாரா் பெயா் | பழைய வாடகை | 15% உயா்வு செய்யப்பட வேண்டிய வாடகை | 01.04.2015 முதல் உயா்வு செய்யப்பட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 6310047 | பி. சௌந்திரராஜன் | 7888 | 1183 | 9071 |
| 2. | 6310048 | பாப்பம்மாள் | 7888 | 1183 | 9071 |
| 3. | 6310049 | பி. வேலுசாமி | 7888 | 1183 | 9071 |
| 4. | 6310050 | பழனியப்பன் | 7888 | 1183 | 9071 |
| 5. | 6310051 | மருதாச்சலம் | 7888 | 1183 | 9071 |
| 6. | 6310052 | நவநீதகிருஷ்ணன் | 7888 | 1183 | 9071 |
| 7. | 6310053 | சா்வோதயா சங்கம் | 7888 | 1183 | 9071 |

மேற்படி கடைகளின் குத்தகைதாரா்கள் உரிம நீட்டிப்பு கட்டணம் ரூ.1000/- செலுத்தி உரிம நீட்டிப்பு வேண்டி மனு செய்யும் பட்சத்தில் கலம் எண் 6-ல் கண்டுள்ள புதிய வாடகையை நிா்ணயம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம்.

உரிம நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரா்களின் உரிமத்தை இரத்து செய்து குத்தகைதாரா்களின் வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்து கடைகளை மறுஏலம் விட, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண116 , நாள் : 20.01.2015 -ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் : 50/2015/கிஅ11

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 389 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 20**

பொருள் குத்தகை – கோயம்புத்தூா்மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - 2014-17-ம் மூன்றாண்டுகளுக்கு வருடாந்திர குத்தகை இனங்கள் ஒப்படைக்கப்பட்டது – 31.03.2015 உடன் ஓராண்டிற்கு உரிமக்காலம் முடிவடைவதால் குத்தகை இனங்களை 2015-16–ம் இரண்டாம் ஆண்டிற்கு ஒப்படைப்பதற்கும் 2012-15 மூன்றாண்டு உரிமக்காலம் முடிவடைந்த குத்தகை இனங்களை 2015-18–ம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பதற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடா்பாக

பாா்வை 1.அரசாணை(நிலை) எண் 78, நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (மா.ந-2).துறை, நாள்:25.05.2009.
2.மாமன்ற தீா்மான எண் 329, நாள் :30.12.2013.
3. மாமன்ற தீா்மான எண் 395, நாள் :07.02.2014.
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 165 , நாள்:20.01.2015

----------

கோயம்புத்தூா் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்கள் பாா்வை (2) மற்றும் (3)-ல் காணும் மாமன்ற தீா்மானத்தில் அனுமதி பெற்று 2014-17-ம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்கப்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களின் ஓராண்டு உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் 01.04.2015முதல் 31.03.2016 வரை இரண்டாம் ஆண்டிற்கு 2014-2015–ம் ஆண்டின் உரிமத்தொகையில் 5% உயா்வு செய்து பாா்வை (1)-ல் காணும் அரசாணையின்படி உரிமத்தொகை நிா்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

அட்டவணை :1

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் திருவாளர்கள் | 2014-15 –ம் ஆண்டு உரிமத் தொகை ரூபாயில் | 5% உயர்வு செய்யப் பட வேண்டிய தொகை ரூபாயில் | 2015-16-ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய தொகை ரூபாயில் | சேவை வரி 12.36% | ஒப்ப டைக் கும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறை | எ. சந்திரன் | 35,501/- | 1775/- | 37276/- | 4607/- | 2-ம் ஆண்டு |
| 2. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தி லுள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் | எ. நமச்சிவாயம் | 20,21,000/- | 101050/- | 2122050/- | 262285/- | 2-ம் ஆண்டு |
| 3. | இராமநாதபுரம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் | எம். முத்து கிருஷ்ணன் | 3,15,000/- | 15750/- | 330750/- | - | 2-ம் ஆண்டு |

மேலும் கீழ்க்காணும் குத்தகை இனங்களின் குத்தகைக் காலம் 31.03.2015 உடன் மூன்றாண்டு முடிவுற்ற நிலையில் அட்டவணை (2) - ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு 2015-2018 வரை மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பதற்கும், பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அட்டவணை : 2</u>

| வ. எண் | வார்டு எண் | குத்தகை இனம் | உரிமக்காலம் முடிவடையும் தேதி |
|---|---|---|---|
| 1. | 63 | சிங்காநல்லூர் ஆடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட அனைத்துப் பகுதிகள்) | ஏல நடவடிக்கையில் உள்ளது |
| 2. | 63 | சிங்காநல்லூர் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 3. | 64 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் உள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 4. | 64 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 5. | 64 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள தொலைபேசி பூத் | 31.03.2015 |
| 6. | 69 | புலியகுளம் மாநகராட்சிக் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |

அ. அட்டவணை 1-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகைகளை குத்தகைதாரருக்கு தெரிவிக்கவும், குத்தகைதாரர்கள் உரிமத்தொகை செலுத்த தவறும்பட்சத்தில் குத்தகை இனங்களை மீண்டும் மறு ஏலம் விடவும், மேற்படி குத்தகைதாரர்கள் பெயரை கருப்புப் பட்டியலில் சேர்த்து வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்யவும்,

ஆ. அட்டவணை 2-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களை 2015-18- ம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி பட்டியலில் சேர்த்து ஏலம் விடவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்:165 , நாள்:20.01.2015-ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் :409/2014/கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 390 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 21**

பொருள் குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - சௌரிபாளையம் மற்றும் உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனைளை குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

பார்வை 1.உதவி நிர்வாகப் பொறியாளர், கிழக்கு மண்டலம் குறிப்பு நாள் : 10.12.2014.
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் :13.01.2015.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 166 , நாள் 20.01.2015

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சௌரிபாளையம் மற்றும் உப்பிலிபாளையம் பகுதிகளில் செயல்பட்டு வந்த ஆடுஅறுவை மனைகளுக்கு உரிய கட்டிடங்கள் ஏதுமின்றி குத்தகை இனத்தில் சேர்க்கப்பட்டு ஏலம் விடப்பட்டு வந்தது. இந்நிலையில் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சிங்காநல்லூர் ஆடு அறுவைமனைக்கு மட்டுமே உரிய கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. மேற்படி சௌரிபாளையம் மற்றும் உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனைகளுக்கு உரிய கட்டிடம் ஏதும் இல்லை என பார்வை (1)-ல் காணும் உதவி நிர்வாகப்பொறியாளர் (கி) குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இரண்டு ஆடு அறுவைமனைகளை குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செய்ய பார்வை (2)-ல் காணும் ஆணையாளர் அவர்களின் குறிப்பில் உத்திரவும் பெறப்பட்டுள்ளது. எனவே சௌரிபாளையம் மற்றும் உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனைகளை குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 166 , நாள் 20.01.15-ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் :12851/2014/கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 391 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 22**

பொருள் உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் -வார்டு எண் 69- பங்கஜா மில் ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடைகளின் உரிமக்காலம் 31.03.2015 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2015 முதல் உரிம நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்றது- மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக -தொடர்பாக.

பார்வை 1.அரசாணை எண் 92, நாள் : 03.07.2007
ஓ2. மாமன்ற தீர்மான எண் 55, நாள் : 30.05.2012.
3. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்திரவு நாள் :23.08.2012.
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் :117, நாள்: 20.01.2015.

------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்குமண்டலம் வார்டு எண் 69, பங்கஜாமில்ரோடு மாநகராட்சி வணிக வளாகக் கடைகளுக்கு 2012-15-ம் ஆண்டிற்கு பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் சந்தை மதிப்பீட்டின்படி 9 ஆண்டுகள் உரிமம் முடிவுற்ற கடைகளுக்கு வாடகை மறு மதிப்பீடு செய்து உரிமம் வழங்கப்பட்டது.

மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமக்காலம் 31.03.2015 உடன் மூன்றாண்டுகள் முடிவடைவதால் அரசு ஆணையின்படி சென்ற ஆண்டு வாடகையில் 15 % வாடகை உயர்வு செய்து 01.04.2015 முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம நீட்டிப்பு வழங்கியும் கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | வரிவதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை | 01.04.2015 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 6910032 | சேதுவராஜ் | 3625 | 544 | 4169 |
| 2. | 6910033 | எம். செபாஸ்டியன் | 3625 | 544 | 4169 |
| 3. | 6910034 | கே. மாலதி | 3625 | 544 | 4169 |
| 4. | 6910035 | திரவியராஜ் | 3625 | 544 | 4169 |
| 5. | 6910036 | பி. விஜயன் | 3625 | 544 | 4169 |
| 6. | 6910037 | கே, காளித் | 3625 | 544 | 4169 |
| 7. | 6910038 | ஆர். சண்முகம் | 3625 | 544 | 4169 |
| 8. | 6910039 | யு.ஆர். மணி | 3625 | 544 | 4169 |

மேற்படி கடைகளின் குத்தகைதாரர்கள் உரிம நீட்டிப்பு கட்டணம் ரூ.1000/- செலுத்தி உரிம நீட்டிப்பு வேண்டி மனு செய்யும் பட்சத்தில் கலம் எண் 6-ல் கண்டுள்ள புதிய வாடகையை நிர்ணயம் செய்து உரிம நீட்டிப்பு வழங்கலாம்.

உரிம நீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்காத உரிமதாரர்களின் உரிமத்தை இரத்து செய்து குத்தகைதாரர்களின் வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்து கடைகளை மறுஏலம் விட, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்:117, நாள்:20.01.2015 -ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் : 51 /2015/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 392 நாள் 22.01.2015**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 23**

பொருள் உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 57- மசக்காளிபாளையம் சாலையில் உள்ள மாநகராட்சி கடையை தமிழக அரசின் சிறப்புத் திட்டம் - அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் -தொடர்பாக.

பார்வை 1. மாமன்ற தீர்மான எண் 238, நாள் :25.10.2013.
2.தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக கழகம், கோவை மண்டலம் அவர்களின் ந.க.எண் : சி1/9081/13 , நாள் 26.09.2014.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 113 , நாள் 20.01.2015

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 57- மசக்காளிபாளையம் சாலையில் மாநகராட்சியால் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கடைகளில் கடை எண் 1 முதல் 4 வரையுள்ள கடைகளை, தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டமான அம்மா பல்பொருள் அங்காடிகள் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்து தருமாறு பார்வை (2)- ல் காணும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கோவை மண்டலம் அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் | அளவு ச.அ | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 1 | 184.84 | 11100.00 |
| 2 | 2 | 184.84 | 11100.00 |
| 3 | 3 | 184.84 | 11100.00 |
| 4 | 4 | 184.84 | 11100.00 |

மேற்படி கடைகளுக்கு பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் கீழ்க்கண்டுள்ளவாறு மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகையினை கோவை மண்டல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு தெரிவித்து, வாடகையினை செலுத்த மேற்படி கழகம் ஒப்புதல் தெரிவிக்கும் பட்சத்தில், நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை அடிப்படையில், தமிழ்நாடு அரசு நிறுவனம் என்பதால் பொது ஏலம் தவிர்த்து கோவை மண்டல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்:113, நாள் 20.01.2015-ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் : 11046 /2014/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 393 நாள் 22.01.2015**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 24**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு ஒப்படைக்கப்பட்டு வரும் 31.03.2015 ம் தேதியுடன் உரிமக் காலம் முடிவடைவதால் தற்போது புதிய ஏலதாரர்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை இனஙகளை 2015-2018 ம் ஆண்டுக்கு உரிமம் ஒப்படை செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | குத்தகை இனம் |
|---|---|
| 1 | துடியலூர் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 2 | துடியலூர் இரு சக்கர வாகனம்நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3 | துடியலூர் நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4 | கணபதி சத்தி ரோடு நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |

எனவே குத்தகை இனங்களில் மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகளின்படி கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 128 நாள் 20.01.2015 ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இப்பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 12926 /2014/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 394 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 25**

பொருள் **கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – 2015 - 2018 மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2015 – 2016-ம் ஈண்டிற்கு 5 % சதவீதம் உயர்வு செய்து புதுப்பித்தல் – பொது மின் ஏலம் மற்றும் உயர்வு செய்து புதுப்பித்தல் பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் – தொடர்பாக.**

**பார்வை:**

1. அரசு ஆணை (நிலை) எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள் **25.05.2009.**
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்டத் தீர்மானம் எண்.129 நாள். 20.01.2015.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களுக்கு பார்வையில் காணும் அரசு ஆணையின்ப்படி 2014-2015 ல் வழங்கப்பட்ட உரிமைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்தும் 2015 - 2016ம் ஆண்டிற்க்கான குத்தகை தொகையாக நிர்ணயம் செய்ய கீழ் காண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) புதுப்பிக்கப்பட வேண்டியவை

| வ எண் | குத்தகைத்தாரரின் பெயர் | வருடாந்திர குத்தகை இனங்களின் விபரம் | ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரம் | 2013 – 2014ம் ஆண்டிற் கான குத்தகை தொகை ரூ. | 2014 – 2015ம் ஆண்டு ஏல உயர்வுக்கு பின் தொகை ரூ. | 2015 – 2016ம் ஆண்டு ஏல உயர்வுக்கு பின் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருமதி. ஆர். கல்பனா | செட்டி வீதி கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013 31.03.2016 | 2,91,500 | 3,06,075 | 3,21,379 |
| 2 | திரு. முகம்மது ரபிக் | லாரிபேட்டை கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013 31.03.2016 | 62,000 | 65,100 | 68,355 |
| 3 | திரு. அப்துல் சுக்கூர் | லாரிபேட்டை நுழைவு கட்டணம் வசூல் | 01.04.2013 31.03.2016 | 3,00,600 | 3,15,630 | 3,31,412 |
| 4 | திரு. N.கந்தசாமி | உக்கடம் ஆடு அறுவை மனை | 01.04.2013 31.03.2016 | 7,91,500 | 8,31,075 | 8,72,629 |
| | திரு. கணேஷ்குமார் | குளத்துப்பாளையம் நவீன கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013 31.03.2016 | 91,250 | 95,813 | 1,00,604 |
| 6 | திரு. M.அன்புராஜ் | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் | 01.04.2013 31.03.2016 | 2,00,006 | 2,10,006 | 2,20,506 |
| 7 | திரு. M.அன்புராஜ் | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏல மேடை | 01.04.2013 31.03.2016 | 6,21,000 | 6,52,050 | 6,84,653 |
| 8 | திரு. J.பஷீர் | செட்டிபாளையம் ரோடு மாடுவதை சாலை | 01.04.2013 31.03.2016 | 2,95,000 | 3,09,750 | 3,25,238 |

(ஆ) 2015 – 2016 வருடாந்திர குத்தகை இனங்கள் பொது ஏலம் /மின் ஏலம் மூலம் ஒப்படைப்பு செய்ய வேண்டிய இனங்கள்

| வ எண் | வருடாந்திர குத்தகை இனங்களின் விபரம் | குத்தகை காலம் | 3 ஆண்டிற்கான செலுத்தப்பட்ட சராசரி தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | சின்னசுடுகாடு கட்டணக் கழிப்பிடம் , வார்டு எண் 93 | 01.04.2012 31.03.2015 | 99,750 |
| 2. | சுண்டக்கமுத்தூர் ரோடு கட்டணக் கழிப்பிடம் ,வார்டு எண் 88 | 01.04.2012 31.03.2015 | 71,400 |
| 3. | தால் பேக்டரி வீதி கட்டண கழிப்பிடம், வார்டு எண் 88 | 01.04.2012 31.03.2015 | 1,73,250 |
| 4. | குனியமுத்தூர் சுங்க வசூல், வார்டு எண் 93 (வாகனங்களுக்கு) | 01.04.2012 31.03.2015 | 2,11,050 |
| 5. | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர் பதனக்கிடங்கு, வார்டு எண் 97 | 01.04.2012 31.03.2015 | 94,788 |

மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2014 – 2015ம் ஆண்டின் ஏலத்தொகையுடன் 5 சதவீகிதம் உயர்வு செய்யப்பட்ட தொகைஇ சேவைவரி முதலிய தொகைகளை செலுத்த சம்மதம் தெரிவிக்கும் குத்தகைகதாரர்களுக்கு உரிமம் புதுப்பித்து காலநீட்டிப்பு வழங்கவும். உரிமம் புதுப்பிக்க சம்மதம் தெரிவிக்காத குத்தகைதாரர்களின் உரிமைத்தை ரத்து செய்து. அவர்களது வைப்புத்தொகையை பறிமுதல் செய்து கருப்பு பட்டியலில் பெயர் சேர்க்கவும் அவ்வினங்களை மறுஏலம் கொண்டுவர ஒப்பந்தப்புள்ளி செய்தித்தாளில் அறிவிப்பு செய்வதற்கும் அதற்குண்டான செலவின தொகையினை பொது நிதிலிருந்து செலவு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 129 நாள். 20.01.2015ன்படி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ததைத் தொடர்ந்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண். 698 / 2012 அ1 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 395 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 26**

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி - தெற்கு மண்டலம் - வார்டு எண் **98**ல் பகுதியில் பாரத் நகரில் கிணத்துகிடவு சட்ட மன்ற உறுப்பினர் நிதியில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலை கடை எண் **116**க்கு வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக. |
| பார்வை: | **1.**தலைவர் குனியமுத்தூர் கோ ஆப்ரேடிவ் ஸ்டோர் லிமிடெட் அவர்களின் கடித நாள் **17.11.2014**<br>2.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்டத் தீர்மானம் எண்.124 நாள். 20.01.2015. |

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். **98**ல் பாரத் நகர் பகுதியில் மாண்புமிகு கிணத்துகிடவு சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து புதியதாக கட்டப்பட்ட நியாய விலை கடை எண் **116**ஐ குனியமுத்தூர் கோ ஆப்ரேடிங் ஸ்டோர் மூலம் நியாய விலை கடை நடத்திக் கொள்ளவும், இக்கடைக்கு பொது பணித்துறை மதிப்பிட்டின்படி மாத வாடகையாக ரூ.**7200/-** நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளர் (தெற்கு) தமது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி நியாய விலைக்கடைக்கு மாத வாடகை நிர்ணயம் செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 124 நாள். 20.01.2015ன் படி மாதாந்திர வாடகையாக ரூ.2500/- நிர்ணயம் செய்ய பரிந்துரை அளிக்கப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்திற்கு ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு; : அனுமதி அளிக்கலாம். ந.க. எண். **10439/ 2013 / (தெ)**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 396 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 27**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.54-ரங்கநாதபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் காலியாக உள்ள அலுவலகத்தை காவல் துறை கண்காணிப்பாளர் கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு தற்காலிகமாக மாத வாடகை ரூ.5,12,287/-க்கு ஒதுக்கீடு செய்ததை குறைந்தபட்ட மாத வாடகை ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்ய கோருவது – தொடர்பாக

பார்வை
1. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.04.03.2014.
2. மாமன்ற தீர்மான எண்.222 நாள்.25.08.2014.
3. காவல் கண்காணிப்பாளர், கோவை மாவட்டம் அவர்களின் அலுவலக கடித எண்.சி4/5200/10, நாள்.30.09.2014
4. உதவி ஆணையாளர் (வருவாய்) அவர்களின் குறிப்பு நாள்.14.10.214.
5. உதவி ஆணையாளர் (ம) அவர்களின் குறிப்பு நாள்.18.12.2014.
6. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.174 நாள்.20.01.2015

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.54-ரங்கநாதபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் (தெற்கு பகுதி) காலியாக உள்ள அலுவலகத்தை காவல் துறை கண்கானிப்பாளர் கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு தற்காலிகமாக தரைதளம் மற்றும் முதல் தளம் (13058.55சதுரடி) பார்வை 1-ல் காணும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.04.03.2014–ன்படி ரூ.5,12,278/- என்ற மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 2-ல் காணும் மாமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் கடித்தில் காவல் துறை பொது மக்களுக்கு சேவை செய்யும் துறையாக இருப்பதாலும் பொது நலன் கருதி மேற்கண்ட இடத்தில் இம்மாவட்ட காவல் அலுவலகம் வாடகைக்கு இயங்குவதற்கு குறைந்தபட்ச மாத வாடகையாக ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளார்கள்.

பார்வை 4 மற்றும் 5-ன் படி மாமன்ற தீர்மான எண்கள் 393,நாள்.17.02.2014, 169, நாள்.07.08.2014 மற்றும் 222 நாள்.25.08.2014 ஆகியவற்றின்படி

1) உதவி இயக்குநர் பேரூராட்சிகள் அலுவலகம்
2) தமிழ் வளர்ச்சிக் கழகம்
3) மாவட்ட ஊராட்சி மற்றும் மாவட்ட திட்டக்குழுமம் அலுவலகம்
4) ஒருங்கிணந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் அலுவலகம்
5) மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அலுவலகம்

ஆகிய அரசு அலுவலகங்களுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படியான மாத வாடகையில் 50 சதவீதம் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதனைப்போல் மேற்கூறிய காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகை ரூ.5,12,278/-ல் 50சதவீதம் குறைத்து மாத வாடகை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.174 நாள்.20.01.2015-ல் மாமன்ற முடிவிற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்:2281/2014/அ1(ம)

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 397 நாள் 22.01.2015</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 174 நாள் 20.01.2015 –ன் பரிந்துரையை ஏற்று நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ. 5,12,278ல் இருந்து 50 சதவீதம் குறைத்து நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 28

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட வார்டு எண். 82-ல் உக்கடம் பேருந்து நிலையம் அருகாமையிலுள்ள (பழைய மீன் மார்க்கெட் இருந்த இடத்தில்) இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை 2014-2015-ம் ஆண்டிற்கான பொது ஏலத்தில் சேர்ப்பதை – நீக்கம் செய்வது – தொடர்பாக.

பார்வை- 1.மாமன்ற தீர்மான எண்.171 நாள்.07.08.2014.
2.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.329.09.2014.
3.வ.வி.ம.நி.கு தீர்மான எண்.125 நாள்.20.01.2015.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட வார்டு எண்.82-ல் உக்கடம் பேருந்து நிலையம் அருகாமையிலுள்ள (பழைய மீன் மார்க்கெட் இருந்த இடத்தில்) இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்தை பொது ஏலத்தில் சேர்க்க பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மான எண். 171 நாள்.07.08.014-ல் தீர்மானிக்கப்பட்டது.

பார்வை 2-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின் பேரில் உக்கடம் பகுதியில் மேம்பாலம் கட்டுமானப்பணி துவங்க இருப்பதால் இவ்வினத்தை ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யலாம் என உத்திரவு பெறப்பட்டுள்ளது.

எனவே வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.86 நாள்.30.07.2014 மற்றும் மாமன்ற தீர்மான எண்.171நாள்.07.08.2014-ன் படி 2014-2015-ம் ஆண்டிற்கான பொது ஏல இனத்தில் சேர்க்க தீர்மானிக்கப்பட்டதை ரத்து செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.125 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண்.1956/2010/அ1(ம)

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 398 நாள் 22.01.2015</u>

வார்டு எண் 82 என்பதற்கு பதிலாக 84 என திருத்தம் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் டாக்டர் நஞ்சப்பாசாலை - கைத்தறி மைதானத்தை காந்திபுரத்தில் பாலம் கட்டுதல் பணிக்கு நெடுஞ்சாலைத் துறைக்கு வாடகையின்றி வழங்க அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை :
1. நெடுஞ்சாலைத் துறையினரின் கடிதம் நாள். 14.08.2014.
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.16.08.2014.
3. மாமன்ற தீர்மான எண்.173 நாள்.07.08.2014.
4. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.126 நாள்.20.01.2015.

***********

பார்வை (1)-ல், கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72-ல் காந்திபுரத்தில் மாநில நெடுஞ்சாலைத் துறை மூலம் உயர்மட்ட பாலம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரி விரிவாக்கப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பணி தொடர்பாக இம்மாநகராட்சிக்கு சொந்தமான கைத்தறி மைதானத்தில் கட்டுமான பொருட்கள் மற்றும் இதரவைகள் இருப்பு வைக்க வேண்டி 2 ஆண்டுகளுக்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்து தருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 08.08.2014-ம் தேதியில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சட்டம் ஒழுங்கு கூட்டத்தில் மேற்படி இடத்தினை உடனடியாக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 2-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின் பேரில் மேற்படி இடம் நெடுஞ்சாலைத் துறையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி கைத்தறி மைதானம் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு பார்வை 3-ல் காணும் மாமன்ற தீர்மான எண்.173 நாள்.07.08.2014-ன்படி தினசரி வாடகை ரூ.2000/- முதல் ரூ.20,000/- வரை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தற்போது காந்திபுரத்தில் பாலம்கட்டுதல் பணிக்கு நெடுஞ்சாலைத் துறையினரால் உபயோகப்படுத்தப்பட்டு வரும் கைத்தறி மைதானத்திற்கு, வாடகையின்றி வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.126 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண். 8185 /2014/அ7(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 399 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 30**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.54 – விவேகானந்தா சாலையிலுள்ள ரங்கநாதபுரம் ஆரம்பள்ளி வளாகத்தில் வடப்புறத்தில் 1720 சதுரடியினை கூடுதலாக கோவை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலக பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்திக்கொள்ள மாத வாடகை நிர்ணயம் செய்வது - தொடர்பாக.

பார்வை 1.உதவி ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.24.10.2014.
2.இளப்பொறியாளர் குறிப்பு நாள்.14.10.2014.
3. மாமன்ற தீர்மான எண்.222 நாள்.25.08.2014.
4. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.127 நாள்.20.01.2015

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54-ல் விவேகானந்தா சாலையிலுள்ள ரங்கநாதபுரம் ஆரம்பள்ளி வளாகத்தில் பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி 13058.55 சதுரடியினை மாத வாடகை ரூ,39.23 சதுரடி என்ற பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் அடிப்படையில் கோவை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மேலும் ரங்கநாதபுரம் ஆரம்பள்ளி வளாகத்தில் வடபுறத்தில் 1720 சதுரடியினை கூடுதலாக கோவை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.54-ல் ரங்கநாதபுரம் ஆரம்பள்ளி வளாகத்தில் வடபுறத்தில் 1720 சதுரடி கூடுதலாக உபயோகப்படுத்துமிடம் கோவை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் | 39.23 | 67,475/- |

மேற்குறிப்பிட்டவாறு வாடகை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.127 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.12339/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 400 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 31**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இரத்து செய்தல் மற்றும் இத்துடன் கூடுதலாக நான்கு சக்கர வாகனங்களுக்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தையும் சேர்த்து பொது ஏலம் கோருதல் -வைப்புத்தொகைகள் நிர்ணயம் செய்வது – தொடர்பாக

பார்வை 1.உதவி வருவாய் அலுவலர், மத்திய மண்டலம் அவர்கள் ஆய்வு நாள்.01.12.2014.
2.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.18.12.2014.
3. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.130 நாள்.20.01.2015

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 அவினாசி ரோடு பாஸ்போர்ட் அலுவலக வளாகம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2012-2015 ஆண்டிற்கு திரு.P.A.உசேன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பார்வை 1-ல் காணும் ஆய்வின் போது மேற்கூறிய குத்தகை இடத்தில் இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் மட்டுமே ஒதுக்கீடு பெறப்பட்டிருந்தும் குத்தகைதாரர் மாநகராட்சி ஏல நிபந்தனைகளுக்கு முரணாக நான்கு சக்கர வாகனங்களுக்கும் சேர்த்து இரசீது அச்சடிக்கப்பட்டு ரூ.10/- வசூல் செய்து வருவது கண்டறியப்பட்டது.

எனவே பார்வை 2-ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின் பேரில் குத்தகைதாரர் திரு.P.A.உசேன் அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்து அவர் செலுத்திய அனைத்து தொகைகளும் பறிமுதல் செய்யப்பட்டு 29.12.2014 முதல் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இனி வரும் காலங்களில் மேற்படி தவறு நடைபெறமால் இருக்க கூடுதலாக நான்கு சக்கர வாகனங்களுக்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தையும் சேர்த்து குத்தகை நிபந்தனைகளின்படி பொது ஏலத்தில் சேர்க்க வைப்புத்தொகைகள் கீழ் கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

| இனம் | வைப்புத் தொகை ரூ | காப்புத் தொகை ரூ | சொத்துமதிப்பு சான்றிதழ அல்லது வங்கி உறுதி சான்றிதழ் ரூ | சொத்து மதிப்புச் சான்றிதழ அல்லாமல் அதற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை ரூ |
|---|---|---|---|---|
| அவினாசி ரோடு பாஸ்போாட் அலுவலகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,00,000/- | 25,000/- | 3,00,000/ | 75,000/- |

<u>கட்டண விபரம்</u>

1) சைக்கிள்(மிதி வண்டி) ஒவ்வொரு வாகனத்திற்கு ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் கட்டணம் ரூ.2/-
2) மொபட், ஸ்கூட்டர் பைக் முதலிய இரு சக்கர வாகனங்கள் ஒவ்வொன்றுக்கும் கட்டணம் ரூ.5/- ( ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கு மட்டும்).
3) நான்கு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் ரூ.10/- ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கு மட்டும்.

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய மேற்குறிப்பிட்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் திரு.P.A.உசேன் அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்து அவர் செலுத்திய அனைத்து தொகைகளும் பறிமுதல் செய்யப்பட்டு 29.12.2014 முதல் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டுவருவதற்கு பின்னேப்பு வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில்வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.130 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.11130/2012/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 401 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 32

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.73- பழைய தெற்கு மண்டல அலுவலகத்தில் தரை தளத்தில் துணை இயக்குநர் குற்ற வழக்கு தொடர்வுத்துறைக்கு ஓதுக்கீடு செய்ததை ரத்து செய்தல் - தொடர்பாக

பார்வை 1.மாமன்ற தீர்மான எண்.393 நாள்.17.02.2014.
2. துணை இயக்குநர் குற்ற வழக்கு தொடர்வு துறை கடித 47/2014/A2(ம) நாள்.17.12.2014
3. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.167 நாள்.20.01.2015

---------

பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.73-பழைய தெற்கு மண்டல அலுவலகத்தில் தரை தளத்தில் துணை இயக்குநர் குற்ற வழக்கு தொடர்வுத்துறைக்கு 1376சதுரடி அளவுள்ள அலுவலகத்தினை தற்காலிகமாக மாத வாடகைக்கு ரூ.36306/- என நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் மேற்கூறிய அலுவலக ஒதுக்கீடு தொடர்பாக சென்னை குற்ற வழக்கு தொடர்வுத்துறை இயக்குநர் அவர்களிடமிருந்து ஒதுக்கீடு கடிதம் இதுவரை பெறப்படாததால் தற்போது இவ்வலுவலகம் தேவைப்படவில்லை என கடிதம் பெறப்பட்டுள்ளது.

எனவே மாமன்ற தீர்மான எண்.393 நாள்.17.02.2014-ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமத்தை ரத்து செய்து பிற அரசு அலுவலங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில்வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.167 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்:12339/2013/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 402 நாள் 22.01.2015**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 33

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2015-2018 மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2015-2016-ம் ஆண்டிற்கு 5சதவீதம் உயர்வு செய்து புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் தொடர்பாக.

பார்வை 1.அரசு ஆணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள்.25.05.2009.
2. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.168 நாள்.20.01.2015

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட குத்தகைக்காலம் மூன்றாண்டு முடிவுற்றதுமற்றும் 2014-2015-ல் ஒப்படைக்கப்படாத பொது ஏலத்திலுள்ள கீழ்க்கண்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு, 2015-2018 மூன்று ஆண்டுகளுக்கு மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த ஒப்புதல் வேண்டப்படுகிறது.

(அ)2015-2016-ம் ஆண்டிற்கான புதிய இனங்கள்

| வ. எண். | குத்தகை எண். | குத்தகை இனம் |
|---|---|---|
| 1. | 39 | சீனிவாசபுரம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் |
| 2 | 55 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (ஆர்.வி ஹோட்டல் எதிரில்) நவீன கட்டண கழிப்பிடம |
| 3 | 89 | சிவானந்தா காலனி அறிவியல் பூங்கா கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4 | 45 | அவினாசி ரோடு பாஸ்போர்ட் அலுவலகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 5 | 46 | வ.உ.சி.பூங்காவில் உள்ள மிருக காட்சி சாலை நுழைவுக்கட்டணம் மற்றும் சிறுவர் விளையாடும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 6 | 34 | ஆம்னி பேருந்து நிலைத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 7 | 76 | லிங்கப்பசெட்டி வீதி நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் |
| 8 | 43 | உப்பிலிப்பாளையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம |
| 9 | 102 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |

| | | |
|---|---|---|
| 10 | 58 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் |
| 11 | 61 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 12 | 107 | மாரியப்பன் வீதி இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 13 | 74 | உக்கடம் புதிய மீன் மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் & இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 14 | 50 | இராஜவீதி இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம |
| 15 | 31 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் - அறை எண் 4ஐ தவிர) |

(ஆ)

2014-2015-ல் முதலாண்டு ஒப்படைக்கப்பட்ட இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து இரண்டாம் ஆண்டுக்கு புதுப்பிக்கப்படவேண்டிய இனங்கள் .

| வ. எண். | குத்தகை எண். | குத்தகை இனம்/ குத்தகைதாரர் பெயர் | 2014-2015-ம் ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | 2015-2016-ம் ஆண்டுக்கு 5சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 16 | 66 | குரு ஹோட்டல் நான்கு சக்கர வாகனம் கட்டண வசூலிக்கும் உரிமம். திரு.M.அரவிந்த் | 14,10,000/- | 14,80,500/- |
| 17 | 60 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் புதிய நவீன கட்டணம் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் திரு.S.வேலுச்சாமி | 12,55,000/- | 13,17,750/- |
| 18 | 63 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டண வசூலிக்கும் உரிமம் திரு.M.அருண்சங்கர் | 26,02,600/- | 27,32,730/- |
| 19 | 40 | சிவானந்தாகாலனி நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.K.பாலாஜி | 46,800/- | 49,140/- |
| 20 | 44 | வ.உ.சி பூங்கா சிறுவர் இரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.S.கிருஷ்ணன் | 2,88,000/- | 3,02,400/- |
| 21 | 53 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.C.செல்வம் | 17,30,000/- | 18,16,500/- |
| 22 | 35 | சத்தி ரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.S.சங்கர் | 5,76,000/- | 6,04,800/- |
| 23 | 49 | தியாகி குமரன் மார்க்கெட் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் திரு.S.சங்கர் | 22,23,000/- | 23,34,150/- |

| வ. எண். | குத்தகை எண். | குத்தகை இனம்/ குத்தகைதாரர் பெயர் | 2014-2015-ம் ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | 2015-2016-ம் ஆண்டுக்கு 10சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 24 | 79 | சீனிவாசபுரம் கல்யாணமண்டபம் பராமரிக்கும் உரிமம் திரு.T.ராகவலிங்கம் | 7,15,000/- | 7,86,500/- |

(இ)

2014-2015-ல் இரண்டாம் ஆண்டு புதுப்பித்த இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து மூன்றாம் ஆண்டுக்கு புதுப்பிக்கப்படவேண்டிய இனங்கள்

| வ. எண். | குத்தகை எண். | குத்தகை இனம் | 2014-2015-ம் ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | 2015-2016-ம் ஆண்டுக்கு 5சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 25 | 56 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் தளம்எண்.1,2,3 மற்றும் 4 கட்டண வசூலிக்கும் உரிமம் திரு.ஏ.ரகோத்தமன் | 17,12,550/- | 17,98,178/- |
| 26 | 36 | சத்தி ரோடு ஆடு மாடு அறுவை மனை கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.A.அஸ்கர்அலி | 7,03,495/- | 7,38,670/- |
| 27 | 59 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம். திரு.S.வேலுச்சாமி | 1,12,455/- | 1,18,078/- |
| 28 | 42 | வ.உ.சி பூங்கா வளாகம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம். திரு.K.கோபால் சாமி | 4,19,738/- | 4,40,725/- |
| 29 | 68 | டவுன்ஹால் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம். திரு.A.அன்வர்பாஷா | 12,60,000/- | 13,23,000/- |
| 30 | 71 | உக்கடம் பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டண வசூலிக்கும் உரிமம். திரு.முகமது ரபீக் | 1,58,550/- | 1,66,478/- |
| 31 | 69 | உக்கடம் பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் திரு.O.A.செய்யது இப்ராஹீம் | 1,62,750/- | 1,70,888/- |
| 32 | 67 | உக்கடம் பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் திரு.M.A.சபேர் அலி | 12,33,750/- | 12,95,438/- |
| 33 | 51 | தியாகி குமரன் மார்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் திரு.M.ஜெயபிரகாஷ் | 8,41,843/- | 8,83,935/- |
| 34 | 75 | இராமர் கோவில் வீதி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம். திரு.M.A.சபேர் அலி | 29,03,250/- | 30,48,413/- |
| 35 | 70 | உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம். திரு.V.M.அப்துல்சுக்கூர் | 7,87,500/- | 8,26,875/- |
| 36 | 48 | தியாகி குமரன் கடைகளுக்கு கட்டண வசூலிக்கும் உரிமம். திரு.P.சங்கர் ரமேஷ் | 32,65,500/- | 34,28,775/- |
| 37 | 64 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம். திரு.எம்.ஹரிகிருஹ்ணன் | 13,88,100/- | 14,57,505/- |
| 38 | 38 | சீனிவாசபுரம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் கட்டண வசூலிக்கும் உரிமம் திரு.எம்.ஹரிகிருஹ்ணன் | 25,23,150/- | 26,49,308/- |

வரிசை எண்.1 முதல் 15 வரை உள்ள இனங்களுக்கு 2015-2018-ம் ஆண்டிற்கான ஏல இனங்களில் சேர்க்கவும் வரிசை எண்.16 முதல் 38 வரை உள்ள இனங்களுக்கு குத்தகைதாரர்களிடமிருந்து 2015-2016-ம் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்துகொள்ள சம்மத கடிதம் பெறப்பட்டுள்ளது. சம்மத கடிதம் வழங்கும் குத்தகைதாரர்களுக்கு இனங்களை ஒப்படைக்கவும் சம்மத கடிதம் வழங்கியும் ஏலத்தொகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களின் இனங்களை மறு ஏலத்தில் சேர்க்கவும், மேலும் குத்தகைதாரர் செலுத்திய தொகைகளை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவுவைத்து அவர்களது பெயர்களை கருப்புபட்டியிலில் சேர்க்கவும் அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில்வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.168 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண்.9999/2014/அ2(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 403 நாள் 22.01.2015</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 34**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.51 சீனிவாசபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள கடை எண்.1 பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது – தொடர்பாக

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.19.01.2015
2. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.172 நாள்.20.01.2015

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 06.11.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண். | இனம் | 13.08.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.51 சீனிவாசபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள கடை எண்.1அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.7,570/- | ரூ.3,500/- திரு.M.அன்புராஜ் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.6,450/- திரு.S.ராஜா (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு ஆறு முறை நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. ஏழாவது முறையாக 13.08.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்பைக் காட்டிலும் குறைவாகவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. 06.11.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு. S.ராஜா அவர்களிடமிருந்து ரூ.6,450,-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கடைக்கு அரசு மதிப்பு ரூ.3500/- என நிர்ணயம் செய்யப்பட்டு மாமன்ற தீர்மான எண். 34 நாள் 29.07.2011-ல் உயர்ந்தப்பட்ச ஏலக்கோரிகையாக ரூ.7589-க்கு திரு.v.மணிவண்ணன் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் மேற்படி கடையை தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தால் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதால் இக்கடையின் உரிம ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் கொண்டு வரப்பட்டது. எனவே இக்கடைக்கு பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கை ஏற்று மாநகராட்சி ஏற்படும் தொடர் வருவாய் இழப்பினை தவிர்த்து ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில்வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.172 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 404 நாள் 22.01.2015</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 35**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புருக் பாண்ட சாலை) முதல் தளத்தில் கடை எண்.8, 9 மற்றும் 10 பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது – தொடர்பாக

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.19.01.2015
2. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.170 நாள்.20.01.2015

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 06.11.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

(அ)

| வ.எண் | இனம் | 13.08.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புருக் பாண்ட சாலை) முதல் தளத்தில் கடை எண். 8 (584சதுரடி)அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.38,370/- | ரூ.20,500/- திரு.N.சுப்ரமணியன் ( ஒப்பந்தப்புள்ளி) | ரூ.38,700/- திருமதி.நிஸாகுமார் ( ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி (அ)இனத்திற்கு பத்து முறை ஏலம் நடைபெற்றது. வரிசை எண்.1-ல் உள்ள கடைக்கு 23.07.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் திரு.N.சுப்ரமணியன் அவர்களிடமிருந்து ரூ.21,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மேலும் 13.08.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் திரு.N.சுப்ரமணியன் அவர்களிடமிருந்து ரூ.20,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் திருமதி நிஸாகுமாரி அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

(ஆ)

| வ.எண் | இனம் | 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை) முதல் தளத்தில் கடை எண். 9 (385சதுரடி) அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.25,295/- | ரூ.25,740/- திருமதி.நிஸாகுமாரி ( ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | வார்டு எண்.25-ல் கிருஷ்ணசாமி ரோடு (புரூக் பாண்ட சாலை) முதல் தளத்தில் கடை எண்.10 (385சதுரடி)அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.25,295/- | ரூ.25,740/- திருமதி.நிஸாகுமாரி ( ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி (ஆ)இனத்திற்கு வரிசை எண்.1 மற்றும் 2–க்குபத்து முறை ஏலம் நடைபெற்றுள்ளது. ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.9 மற்றும் 10க்கு திருமதி.நிஸாகுமாரி அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

எனவே (அ) மற்றும் (ஆ) இனங்களை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.170 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 405 நாள் 22.01.2015</u>**

அனுமதிக்கப்பட்டது

-----------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 36**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.80-ல் ராஜவீதி கார்பார்க்கிங் மாநகராடசி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 1 (சதுரடி 96.87)பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது – தொடர்பாக

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.19.01.2015
2. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.171 நாள்.20.01.2015

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 06.11.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.80-ல் ராஜவீதி கார்பார்க்கிங் மாநகராடசி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 1 (சதுரடி 96.87) அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.10,365/- | ரூ.14,500/- திரு.கே.அசோக்குமார் (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு பத்து முறை ஏலம் நடைபெற்றுள்ளது. ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. 06.11.2014-ல் நடைபெற்ற 11-வது ஏலத்தில் மேற்படி கடை எண்.1க்கு திரு.கே.அசோக்குமார்அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில்வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.171 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 406 நாள் 22.01.2015</u>**

அனுமதிக்கப்பட்டது

-----------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 37

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் வார்டு எண்.68 நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிகவளாகம் கடை எண்.1 (310சதுரடி ) மற்றும் கடை எண்.2-க்கு (310சதுரடி ) பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது – தொடர்பாக

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.19.01.2015
2. வ.வி.ம.நி.கு தீர்மான எண்.169 நாள்.20.01.2015

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 06.11.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயா |
|---|---|---|
| 1. | வார்டு எண்.68 நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிகவளாகம் கடை எண்.1 (310சதுரடி ) அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.8,000/- | ரூ.8100/- திரு.M.மாரிமுத்து (ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | வார்டு எண்.68 நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிகவளாகம் கடை எண்.2 (310சதுரடி ) அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.7,600/- | ரூ.8100/- திரு.தி.திராவிடமணி (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு வரிசை எண்.1 மற்றும் 2 –க்குபத்து முறை ஏலம் நடைபெற்றுள்ளது. ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.1 மற்றும் 2க்கு திரு.M.மாரிமுத்து மற்றும் திரு.தி.திராவிடமணி அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினங்களை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில்வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.169 நாள்.20.01.2015-ல் அதிக ஏலத்தொகைக்கு போக வாயப்புள்ளதால் மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 407 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 38

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட மாதாந்திர வாடகை கடைகளுக்கு 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் காந்திபரம் மத்திய பேருந்து நிலையம் வார்டு எண்.54. தளம் எண்.4-ல் கடை எண். I (1450சதுரடி) பெறப்பட்ட ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்வது – தொடர்பாக

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.19.01.2015
2.வ.வி.ம.நி.கு தீர்மான எண்.173 நாள்.20.01.2015

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 06.11.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 13.08.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 06.11.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | காந்திபரம் மத்திய பேருந்து நிலையம் வார்டு எண்.54. தளம் எண்.4-ல் கடை எண். I (1450சதுரடி )அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.92,438/- (ரூ.63.75 ஒருசதுரடிக்கு) | ரூ.27,000/- திருமதி.V.அனிதா (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.27,900/- திருமதி.V.அனிதா (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு ஏழு முறை நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. எட்டு (02.07.2014) ஒன்பதாவது 23.07.2014, பத்தாவது (13.08.2014) மற்றும் பதினொன்றாவது முறையாக 06.11.2014–ல் நடைபெற்ற ஏலத்தில் திருமதி.V.அனிதா அவர்களிடமிருந்து ரூ.27,900/- ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இது அரசு மதிப்பீட்டை காட்டிலும் குறைவாக பெறப்பட்டுள்ளது. மேலும் மத்திய பேருந்து நிலையத்திலுள்ள வணிக வளாக கடைகளில் உட்புற கடைகளுக்கு தற்போது ரூ.43.75 ஒருசதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அரசு மதிப்பீடு ரூ. 63,438/- என்ற மதிப்பில் நிர்ணயம் செய்து அரசு மதிப்பை திருத்தம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில்வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.173 நாள்.20.01.2015-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-அனுமதிக்கலாம் ந.க.எண்.4363/13/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 408 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 39**

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண்.23 திருவேங்கடசாமி ரோடு வணிக வளாக கட்டிடத்தில் இரண்டு (2) கடைகள் பொதுப்பணித்துறை வாடகை அடிப்படையில் – கோயம்புத்தூர் கூட்டுறவு கட்டிடச் சங்கம் அவர்களுக்கு கடை ஒப்படைப்பது தொடர்பாக.

பார்வை - கோயம்புத்தூர் கூட்டுறவு கட்டிடச் சங்கம் திரு.C.R.பாலமுருகன், தலைவர் அவர்களின் கடித நாள்.20.11.2014

பார்வையில் கண்ட கோயம்புத்தூர் கூட்டுறவு கட்டிடச் சங்கம் தங்களுக்கு சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் திருவேங்கடசாமி ரோட்டில் கட்டப்பட்டுவரும் மாநகராட்சி வணிக வளாக கடைகளில் இரண்டு கடைகளை மட்டும் நடுப்புற சுவர் ஏதும் வைக்காமல் பொதுப்பணித்துறை நிர்ணயிக்கும் வாடகை அடிப்படையில் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்து தருமாறு வழங்குமாறு கோரியுள்ளனர்.

தற்பொழுது திருவேங்கடசாமி சாலையில் தரைதளத்தில் 4 கடைகளும் முதல் தளத்தில் 15 கடைகளும் கட்டப்பட்டு வருகிறது. இளம் பொறியாளரின் குறிப்பின்படி அரசுமதிப்பு (Base Value) சதுர அடிக்கு ரூ.61.86/- ஆகும். மேற்கண்ட கடைகள் அனைத்தும் கடை ஒன்றுக்கு 10 x 21 = 210 சதுரடிக்கு அரசு மதிப்பு ரூ.13000/- கொண்டதாகும். எனவே கூட்டுறவு கட்டிடச் சங்கத்திற்கு இரண்டு கடைகள் நடுப்புறசுவர் இல்லாமல் ஒதுக்கீடு செய்ய கேட்டுள்ளதால் 420 சதுரடிக்கு அரசுநிர்ணயத்தொகை ரூ.26,000/-க்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.122 நாள்.20.1.2015-ன்படி கூட்டுறவு கட்டிடச் சங்கத்திற்கு, முதல் தளத்தில் உள்ள 2 கடைகள் ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.ண்.9681/2014/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 409 நாள் 22.01.2015**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 40**

